www.padippakam.com

1-15 ஜூலை'96 ரூ. 3.50

நெருக்கடியில் சி.பி.எ

# புதிய ஜனநாயகம்




ஐக்கிய முன்னணியி பின்னணி

படிப்பகம்

www.padippakam.com

## வி.வி.மு.க்கு எதிராக ஊர்க் கட்டுப்பாடு! வீண் பழி! போலீசு விசாரணை!
## மேல்சாதி - பண்ணை ஆதிக்க சக்திகளின் கொட்டம்

மதுரை மாவட்டம் தே. மீனாட்சிபுரம் கிராமத்தைச் சேர்ந்த சிலர், கடந்த 29.4.96 அன்று அருகிலுள்ள பண்ணைபுரம் கிராமத்திலுள்ள விடுதியொன்றில் சாப்பிடச் சென்றனர். அவர்கள், ''புரோட்டாவைப் பிய்த்துப் போடச் சொன்னதில்'' எழுந்த வாய்த் தகராறு அடிதடியில் சென்று முடிந்தது.

பண்ணைபுரத்தில் 'கிராமத் தலைவன்' எனத் தனக்குத் தானே பட்டம் கொடுத்துக் கொண்டு சுற்றித் திரியும் பி.டி.வி. பிரசாத் என்ற பண்ணையார், தனது ஊதுகுழல்களைக் கொண்டு இந்த தகராறை ஊதிப் பெருக்கினான். கிராமத்துப் பொதுமக்களைக் கூட்டி, ''பண்ணைபுரம் விவசாயிகள் விடுதலை முன்னணிதான் இந்த தகராறைத் தூண்டி விட்டது'' எனப் பழி சுமத்தி, அமைப்பு மீது அவதூறுகளை அள்ளி வீசினான். இனி, ''தே. மீனாட்சிபுரம் கிராமத்து மக்கள் யாரும் பண்ணைபுரத்திற்குள் நுழையக் கூடாது; அவர்களுக்குப் பொருட்கள் விற்கக் கூடாது; பண்ணைபுரம் எல்லைக்குள் யாரும் சுவரொட்டி ஒட்டக்கூடாது; தட்டி கட்டக்கூடாது'' என ஊர்க் கட்டுப்பாடு விதித்தான். மேலும், பண்ணைபுர கிராமத்துப் பொதுமக்களைத் தூண்டிவிட்டு, சாலை மறியல் நடத்தினான்; இச்சாலை மறியலின் பொழுது போலீசு நடத்திய தடியடியில் பொது மக்கள் பலர் படுகாயமடைந்தனர்.

பண்ணைபுரம் பகுதி வி.வி.மு.வினர், அமைப்பு மீது வீண் பழி சுமத்தப்படுவதைக் கண்டித்தும், பொதுமக்களின் மீது போலீசு தடியடி நடத்தியதைக் கண்டித்தும் தட்டி எழுதி வைக்க முயன்றனர்; ஆனால், தவிர்க்க இயலாதவாறு இம்முயற்சியில் தோழர்கள் தற்காலிகமாகப் பின் வாங்க நேர்ந்தது.

பின் மே தினத்தையொட்டி தோழர்கள் ஊரிலுள் ஒட்டியிருந்த சுவரொட்டிகளை 150 பேர் கொண்ட கும்பலொன்று கிழித்தெறிந்தது. தோழர்கள் மீண்டும் அந்த இடங்களில் சுவரொட்டிகளை ஒட்டியதால், நேரடி மோதல் ஏற்படும் சூழல் உருவானது. மறுநாள் இந்த ரௌடிக் கும்பலின் அராஜகத்தைக் கண்டித்து தோழர்கள் பண்ணைபுரம் சுற்று வட்டாரப் பகுதிகளில் சுவரொட்டிகளை ஒட்டினர். இச்சுவரொட்டிகளைப் பண்ணைபுரத்தில் ஒட்ட முயன்ற பொழுது மீண்டும் தகராறு வெடித்தது. பி.டி.வீ. பிரசாத்திற்கு ஆதரவாக பி.ஜே.பி. மணி, பலசரக்கு கடை கணேசன், கவிதா மெடிக்கல்ஸ் முதலாளி போன்ற பணக்கார கும்பல்கள் களத்தில் குதித்தன.

பண்ணைபுர வி.வி.மு. தோழர் இரவியை 2.5.96 அன்று நடுஇரவில் பிரசாத் கும்பல் பலாத்காரமாக போலீசு நிலையத்திற்கு இழுத்துச் சென்றது. ''மீனாட்சிபுரம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உதவி பண்ணுவதாகவும், தங்க இடம் கொடுப்பதாகவும்'' போலீசைக் கொண்டு மிரட்டி எழுதி வாங்க முயற்சித்தது. தோழர் இரவி, ''எழுதிக் கொடுக்க முடியாது'' என உறுதியாக மறுத்துவிடவே, பிரசாத் கும்பல் மூக்கடைபட்டு போனது.

தகவல்:
வி.வி.மு., தே. மீனாட்சிபுரம்

## தாழ்த்தப்பட்டோர் - மீனவர்கள் மோதலைத் தூண்ட
## எம்.ஆர்.எப். நிர்வாகம் முயற்சி!

சென்னை - திருவொற்றியூர் பகுதியில் கார் - பஸ் - லாரி போன்ற வாகனங்களுக்கான டயர்களைத் தயாரிக்கும் எம்.ஆர்.எப். நிறுவனம் இயங்கி வருகிறது. இவ்வாலையில் ரப்பரை அரைப்பதற்குப் புதிதாக ''11-டி'' என்கிற நவீன பேன்பேரி இயந்திரம் பொருத்தப்பட்டது. இந்த இயந்திரத்தைப் பயிற்சித் தொழிலாளர்களைக் கொண்டு இயக்கவும் செய்தது, நிர்வாகம்.

இவ்வாலையில் செயல்பட்டு வரும் எம்.ஆர்.எப். தொழிலாளர் சங்கம், ''புதிய இயந்திரத்தைப் பயிற்சித் தொழிலாளர்களைக் கொண்டு இயக்குவது ஒப்பந்த விதிகளுக்கு முரணானது; எனவே, கூடுதலாக இருக்கும் நிரந்தரத் தொழிலாளர்களைக் கொண்டு இயக்க வேண்டும்'' என நிர்வாகத்திடம் கோரிக்கை வைத்து, பேச்சு வார்த்தை நடத்தி வந்தது. ஆனால் நிர்வாகமோ, இவ்விசயத்தில் ஒப்பந்த விதிகளைக் காலில் போட்டு மிதித்து, எதேச்சதிகாரமாக நடந்து வந்தது.

இதனால் சங்கம் பயிற்சித் தொழிலாளர்களிடம் நிலைமையை விளக்கிக் கூறி, புதிய இயந்திரம் இயக்கப்படுவதை நிறுத்திவிட்டது. இதற்குப் பழிவாங்கிவிடத் துடித்த நிர்வாகம் 24 தொழிற்சங்க நிர்வாகிகளைத் தற்காலிகப் பணி நீக்கம் செய்தது; மேலும் ஆலையின் இதரப் பிரிவுகளில் தொழிலாளர்களுக்கு வேலை தர மறுத்து, 'ஆலையில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வதாக' வீண்பழி சுமத்தியது.

ஆலையின் வாயிலில் தொழிலாளர்கள் கூட்டம் போடுவதைத் தடுக்க, இரவோடு இரவாக பகுதியைச் சேர்ந்த



சிலருக்கு குடிசைப் போட்டுக் கொடுத்து, தொழிலாளர்களுக்கும் பகுதி மக்களுக்கும் இடையே முரண்பாடு - மோதலை உருவாக்கவும் முனைந்தது எம்.ஆர்.எப். நிர்வாகம்.

நிர்வாகத்தின் நரித்தனங்களை நேரடியாகக் கண்ட அம்பேத்கர் சிறுத்தைகள் இயக்கத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டவர்கள், ஆலைக்கு எதிர்புறம் இருந்த தங்களது இயக்க அலுவலகத்தை, எம்.ஆர்.எப். தொழிலாளர்களின் போராட்டத்திற்குப் பயன்படுத்திக் கொள்ள அனுமதித்தனர்; நிர்வாகத்தை எதிர்த்து தொழிலாளர்கள் நடத்திய ஊர்வலத்தில் பகுதி மக்களும் கலந்து கொண்டு, நிர்வாகத்தின் நப்பாசைகளுக்கு ஆப்பறைந்தனர்.

இதன்பின் நிர்வாகம் திருவொற்றியூர் பகுதியிலுள்ள மீனவ சமூகத்தைச் சேர்ந்த சில ரௌடிகளைக் கைக்குள் போட்டுக் கொண்டு, சாதி மோதலை உருவாக்க முனைந்தது. தாழ்த்தப்பட்டவர்களை வீண் வம்புக்கு இழுத்து, தாழ்த்தப்பட்டோர் - மீனவர் மோதலை உருவாக்க, ரௌடிகளின் மூலம் நிர்வாகம் எடுத்த முயற்சிகளும் தோற்றுப் போயின. தகவல்:
எம்.ஆர்.எப். தொழிலாளர்கள் சங்கம்,
சென்னை.



படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 11

**இதழ்: 14-16**

1 ஜூன் '96 - 15 ஜூலை '96

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 3.50
ஆண்டு சந்தா: ரூ. 84.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

அட்டை ஓவியம்: கரோ

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
புதிய ஜனநாயகம்,
தபால் பெட்டி எண்: 6015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.


# ஆளும் வர்க்க அரசியல் தோல்வி

இந்திய அரசை வழி நடத்திச் செல்வதற்கு மீண்டும் ஒரு அவியல் ஆட்சி நிறுவப்பட்டிருக்கிறது. அரசியல் நெருக்கடிகள் தற்காலிகமாவது தீர்க்கப்பட்டுவிட்டதாக ஒரு தோற்றம் உருவாக்கப்படுகிறது. ஆனால் கடந்தகால அவியல் ஆட்சிகளின் அனுபவங்களை வைத்துப் பார்க்கும்போது, தேவே கௌடா தலைமையிலான இந்த ஐக்கிய முன்னணி ஆட்சியின் நிலை, ''பூரண ஆயுசு, நித்திய கண்டம்தான்'' என்பதை அனைவரும் அறிவர். தேவே கௌடாவும் மொரார்ஜி தேசாய், வி.பி. சிங் போன்று செல்வாக்குள்ள தலைவரும் அல்ல. 1979-இல் ஜனதாக் கட்சி ஆட்சியைக் கவிழ்த்த சரண் சிங், 1990-இல் தேசிய முன்னணி ஆட்சியைக் கவிழ்த்த சந்திரசேகர் போன்ற பதவிவெறி பிடித்த துரோகிகள் இப்போதைய ஐக்கிய முன்னணிக்குள் நிறையவே இருக்கின்றனர். பதவி ஆசைகாட்டி காலைவாரி விட்ட இந்திரா, ராஜீவ் போன்ற நம்பிக்கை துரோகிகள் தாம் நரசிம்ம ராவ், அத்வானி, வாஜ்பாய் ஆகியோர். ஆகவே, இவர்களது ஆதரவை நம்பி எந்தச் சிறுபான்மை, கூட்டணி ஆட்சிகளும் வெகுகாலம் நீடித்திருக்கவும் முடியாது. அதே சமயம் இந்த இரு பிரிவுகளில் ஏதாவது ஒன்றின் ஆதரவின்றி ஆட்சி அமைக்கவும் முடியாது.

கடந்த காலங்களில் இத்தகைய நிலையற்ற அவியல் ஆட்சிகளும் அரசியல் நெருக்கடிகளும் ஏற்பட்டபோது, நாடாளுமன்ற ஆட்சிமுறையே நமது நாட்டுக்குப் பொருந்தாது, அதிபர் ஆட்சிமுறைதான் சிறந்தது என்றெல்லாம் ஆளும் வர்க்க அரசியல் சிந்தனையாளர்கள் அலறித் துடித்தனர். ஆனால் இப்போதோ அத்தகைய பதட்டத்தைக் காணோம். கூட்டணி ஆட்சி முறை தவிர்க்க முடியாது; அதை ஏற்றுக் கொண்டு ஒத்துப் போவதே சரியானது என்று வாதிடுகிறார்கள். காரணம் நிலையான ஆட்சியோ - நிலையற்ற ஆட்சியோ, ஒரு கட்சி ஆட்சியோ - கூட்டணி ஆட்சியோ, தாராளமயமாக்குதல், தனியார்மயமாக்குதல், உலகமயமாக்குதல், நாட்டை மறுகாலனியாக்குதல் என்ற அடிப்படைக் கொள்கையில் எல்லா அரசியல் கட்சிகளும் ஒன்றுபடுகின்றன. எந்த ஆட்சி வந்தாலும் அதை அமலாக்குவதற்குத் தயார் நிலையில் அரசு அமைப்பும் உள்ளது.

ஆனால் புதிய பொருளாதாரக் கொள்கையின் சுமைகளைச் சகித்துக் கொள்ளும் வகையில் நாட்டு மக்களைக் கட்டுப்படுத்தி வைக்கவும், திசை திருப்பவும் பெயரளவுக்கான ஜனநாயக ஆட்சி அமைப்பு நீடிப்பதும், அதற்குச் சேவை செய்யும் அரசியல் கட்சிகளும் அவசியமாக உள்ளன. நரசிம்ம ராவ் தலைமையிலான காங்கிரசு அந்த வேலையைச் செய்வதற்கான தகுதியும் பலமும் இழந்துவிட்ட நிலையில், இந்திய ஆளும் வர்க்கங்களும் அவர்களின் ஏகாதிபத்திய எஜமானர்களும் பாரதீய ஜனதா கட்சியை அதற்குப் பொருத்தமானது என்று தெரிவு செய்து அதை எல்லா வகையிலும் ஆதரித்ததை சமீபத்திய அரசியல் நடவடிக்கைகளில் கண்டோம். அது நாடாளுமன்றத்தில் பெரிய கட்சியாக இருந்தாலும், பெரும்பான்மை பலம் பெற முடியாமற் போனபோது எம்.பிக்களை விலைக்கு வாங்க கோடிகோடியாக நிதி கொடுத்தது மட்டுமல்ல; நேரடியாகவே களத்தில் இறங்கி, பாரதீய ஜனதா அரசை ஆதரிக்கும்படி பெரும் தரகு முதலாளிகள் பலர் பிராந்தியக் கட்சிகளை நிர்பந்தித்தனர். ஆனால் அந்த முயற்சி தோற்றுப் போய் இப்போது கூட்டணிகளின் கூட்டணியாகிய ஐக்கிய முன்னணி அரசு ஏற்பட்டுள்ளது. இதுவும் காங்கிரசு மற்றும் ''இடதுசாரி'' கூட்டணியின் ஆதரவில் தொங்கிக் கொண்டிருக்கிறது. சாதி, மொழி, இனம், பிராந்திய நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல்வேறு அரசியல் கட்சிகளின் கூட்டணி ஒருபுறம்; இந்து மதவெறி பாசிச சக்திகளின் கூட்டணி மறுபுறம். இரண்டுக்கும் இடையே அடையாளம் தெரியாமல் சிதைந்து கொண்டிருக்கும் காங்கிரசு. இந்த அரசியல் கட்சிகள் அனைத்திலும் நீக்கமற பிழைப்புவாத, காரியவாத, கிரிமினல்மயமான பதவி வெறியர்களும் கட்சிமாறிகளும் நிறைந்திருக்கின்றனர்.

இவற்றின் விளைவாக உருவாகும் நாடாளுமன்ற அராஜகம், கட்சி மாறுவதும், குதிரை வியாபாரமும், ஆட்சிக் கவிழ்ப்புகளும், அரசியல் கட்சிகள், குழுக்களின் மறுசேர்க்கையும், மறுதேர்தல்களும் தவிர்க்க முடியாதவையாகிவிட்டன. ஒருவேளை பாரதீய ஜனதா - சிவசேனா கூட்டணி தனிப் பெரும்பான்மை பெற்றாலும் — பெரும்பாலும் வடக்கு மற்றும் மேற்கு மாநிலங்களுக்குள் முடங்கிப் போயிருக்கும் நிலையில் அதற்கான சாத்தியப்பாடும் குறைவே; — அது விரைவிலேயே ஒரு இந்து மதவெறி பாசிச ஆட்சியைத்தான் கொண்டு வரும். ஆகவே, எப்படிப் பார்த்தாலும், பெயரளவிலான ஒரு ஜனநாயக ஆட்சியையும், நிலையான ஆட்சியையும் தரக்கூடிய அரசியல் பிரதிநிதிகளை உருவாக்கிக் கொள்ள முடியாமற் போனது, ஆளும் வர்க்கங்களின் அரசியல் தோல்வியைத்தான் குறிக்கிறது. இதைமூடி மறைத்து இப்போது கூட்டணி ஆட்சியின் மகிமையைப் பாடுகின்றனர்.

படிப்பகம

www.padippakam.com

# பூசையறையில் புரட்சி நாற்காலியில் வலதுகள் நெருக்கடியில் 'மார்க்சிஸ்டு'கள்

கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக, புரட்சி பேசிய போலிக் கம்யூனிஸ்டுகள் புரட்சியைப் பூசையறையில் வைத்து விட்டு நாற்காலி சுகம் தேடும் ராஜாங்க கம்யூனிஸ்டுகளாக எப்போதோ சீரழிந்து விட்டார்கள். இரண்டு போலிக் கம்யூனிஸ்டுக் கட்சிகளில், வலதுகள் தேவே கௌடாவின் ஐக்கிய முன்னணி அரசில் பங்கேற்று விட்டார்கள். 'இடது'களோ இந்த அரசை வெளியிலிருந்து ஆதரிக்கப் போவதாக அறிவித்துள்ளார்கள்.

### வெளியிலிருந்து ஆதரவா? உள்ளிருந்து எதிர்ப்பா?

“தேவே கௌடா அரசில் பங்கேற்பதன் மூலம் முற்போக்கு கொள்கைகளை நிறைவேற்றப் பாடுபடுவோம்; மக்கள் விரோதக் கொள்கைகளை உள்ளிருந்து கொண்டே எதிர்ப்போம்” என்று வலதுகள் கூறுகின்றனர். 'இடது'களோ, “கணிசமான எம்.பி.க்களைக் கொண்ட தீர்மானகரமான சக்தியாக இல்லாததால் நாங்கள் இந்த அரசில் பங்கேற்க மாட்டோம். அதேசமயம் இந்த அரசை வெளியில் இருந்து கொண்டு ஆதரிப்போம்” என்கின்றனர். உள்ளிருந்து கொண்டு எதிர்ப்பதா அல்லது வெளியிலிருந்து கொண்டு ஆதரிப்பதா என்பதில்தான் இவ்விரு கட்சிகளுக்குமிடையே வேறுபாடு நிலவுகிறது. மற்றபடி, தேவே கௌடாவின் சிறுபான்மை அரசை முட்டுக் கொடுத்துத் தாங்கி நிற்பதில் போலிகளுக்கிடையே எந்த முரண்பாடும் கிடையாது.

நாடாளுமன்ற ஜனநாயகத்தைப் பாதுகாப்பது, முற்போக்கு கொள்கைகளை ஆதரிப்பது என்ற பெயரில் மாநிலங்களிலும் மத்தியிலும் பிற்போக்கு ஆட்சிகளைப் போலிகள் ஆதரிப்பதென்பது இப்போது முதன் முறையாக நடப்பது அல்ல. ஏற்கனவே '60களின் இறுதியிலிருந்து அவசர நிலைக் காலம் முடிய பாசிச இந்திராவின் ஆட்சியை வலதுகள் ஆதரித்துள்ளனர். வலது கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த மோகன் குமாரமங்கலம், ரகுநாத ரெட்டி ஆகியோர் பாசிச இந்திராவின் ஆலோசகர்களாகவும் அமைச்சர்களாகவும் இருந்துள்ளனர். அதே போல 'இடதுகள்', மொரார்ஜி தேசாய், சரண்சிங், வி.பி.சிங். ஆட்சிகளை வெளியிலிருந்து ஆதரித்து வந்துள்ளனர். இச்சந்தர்ப்பவாதக் கொள்கையிலிருந்து மேலும் ஒருபடி முன்னேறி மத்திய அரசிலும் பங்கேற்குமளவுக்கு வலதுகள் இப்போது துணிந்து விட்டார்கள். 'இடது'களோ, இந்த முயற்சியின் சாதகமான விளைவுகளைப் பரிசீலித்து வலதுகளின் வழியில் செல்ல தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

### துரதிருஷ்டவாதியா? துரோகியா?

பாரதீய ஜனதாவின் சிறுபான்மை அரசு கவிழ்ந்ததும், மே.வங்க 'மார்க்சிஸ்டு' முதல்வரான ஜோதிபாசுவைக் கூட்டணி அரசின் பிரதமராக்கும் முயற்சி நடந்தது. பாசுவும் பேரங்கள் - பேச்சு வார்த்தைகள் நடத்த டெல்லிக்குப் பறந்தார். பின்னர்




இக்கூட்டணி அரசில் பங்கேற்பதில்லை என்று 'மார்க்சிஸ்ட்' கட்சி அறிவித்தது. காங்கிரசு ஆதரிக்கும் இக்கூட்டணி அரசில் பங்கேற்றால் மே. வங்கத்தில் காங்கிரசை எதிர்த்து அரசியல் நடத்த முடியாமல் சிக்கலாகும்; மேலும் இக்கூட்டணி அரசு நீடிக்க முடியாமல் ஒருவேளை கவிழ்ந்து விட்டால், 'மார்க்சிஸ்டு'களுக்கு அவப்பெயர் ஏற்படும் என்பதால் கட்சித் தலைமை, கூட்டணி அரசில் பங்கேற்பதில்லை என்று முடிவு செய்தது. ஆனால் இதை மூடி மறைத்து, “கூட்டணி அரசில் செல்வாக்கு செலுத்துமளவுக்கு எம்மிடம் போதுமான எம்.பி.க்கள் இல்லாததால், இந்த அரசில் பங்கேற்க இயலவில்லை. இருப்பினும் இந்த அரசை வெளியிலிருந்து ஆதரிப்போம்” என்று கூறி வருகின்றனர்.

இதன் பொருள் என்ன? கூட்டணி அரசில் செல்வாக்கு செலுத்துமளவுக்குப் போதுமான எம்.பி.க்கள் இருந்தால் 'மார்க்சிஸ்டு'கள் இந்த அரசில் பங்கேற்பார்கள் என்பதுதான். பிரதமராகும் வாய்ப்பு கட்சியின் முடிவால் கை நழுவிப் போனதைப் பற்றி பாசுவிடம் பத்திரிகையாளர்கள் கேட்டபோது அவர் கட்சியின் முடிவை ஆதரித்துப் பேசவில்லை. “துரதிருஷ்டவசமாக நான் இந்தக் கட்சியில் இருக்கிறேன்” என்றுதான் அவர் கூறியுள்ளார். பதவி சுகம் பாசுவை எப்படியெல்லாம் பேச வைத்துள்ளது பாருங்கள்.

பாசு மட்டுமல்ல; 'மார்க்சிஸ்ட்' கட்சியின் முக்கியத் தலைவர்கள் பலரும் இத்தகைய கருத்தில்தான் உள்ளனர். ஐக்கிய முன்னணி அரசில் பங்கேற்பதில்லை என்று கட்சியின் மத்தியக் கமிட்டி கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகூட வெறும் நான்கு ஓட்டு வித்தியாசத்தில்தான் வெற்றி பெற்றுள்ளது. அதாவது ஐக்கிய முன்னணி அரசில் பங்கேற்க வேண்டும் என்ற போக்கு 'மார்க்சிஸ்ட்' கட்சியில் பலமாகவே உள்ளது. மயிரிழைப் பெரும்பான்மையில்தான் இது தோற்கடிக்கப்பட்டுள்ளது. இவையனைத்தும் வலது



படிப்பகம்

www.padippakam.com

களின் வழியில் 'இடது'களும் செல்வதற்கான வாய்ப்பு உள்ளதையே நிரூபித்துக் காட்டுகின்றன.

### நீ முன்னாலே போனால் நான் பின்னாலே வாரேன்!

அன்று பிற்போக்கு காங்கிரசு அரசை வெளியிலிருந்து ஆதரிப்பது சந்தர்ப்பவாதமானது என்று வலதுகளைச் சாடிய 'இடது'கள், இன்று வலதுகள் தேவேகௌடா அரசில் பங்கேற்றுள்ளதை எதிர்த்து வாயே திறக்கவில்லை. சித்தாந்த குடுமிபிடி சண்டையோ, மயிர்பிளக்கும் வாதங்களோ இல்லை. இப்போது வலதுகள் மத்தியிலுள்ள கூட்டணி அரசில் பங்கேற்ற பின்னரும், 'இடதுசாரி' முன்னணியிலிருந்து வலதுகளை வெளியேற்ற மாட்டார்களாம்! ஏனென்றால், மத்தியிலுள்ள எந்தவொரு பிற்போக்கு அரசையும் ஆதரிப்பதும், வாய்ப்பிருந்தால் பங்கேற்பதுமான சந்தர்ப்பவாத முடிவுக்கு 'இடது'களும் வந்துவிட்ட பிறகு 'இடது'களுக்கும் வலதுகளுக்குமிடையே சித்தாந்த முரண்பாடே இல்லாமல் போய்விட்டது.

''வலதுகளோ, தேர்தல் பாதையின் மூலமாக அமைதியான வழிகளின் மூலம் தேசிய ஜனநாயகப் புரட்சியைச் சாதிக்க வேண்டும் என்கிறார்கள். நாங்கள் அவர்களிடமிருந்து வேறுபட்டவர்கள். தற்போதைய முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ அரசையும் அரசாங்கத்தையும் அகற்றிவிட்டு புரட்சியின் மூலம் புதிய ஜனநாயக அரசை நிறுவவேண்டும் என்கிறோம். இதுதான் எமது இலட்சியம். அதேசமயம் மக்களுக்கு உடனடி நிவாரணம் கொடுக்கக்கூடிய ஒரு குறைந்தபட்ச திட்டத்தை நிறைவேற்றுவதற்கு உறுதியளிக்கக்கூடிய ஒரு அரசாங்கத்தை உருவாக்க சகல வாய்ப்புகளையும் பயன்படுத்துவோம். இலட்சியத்தை நிறைவேற்றுவதற்கான எமது செயல் தந்திரம் இது'' என்று பேசி வந்த 'மார்க்சிஸ்டு'கள் (பார்க்க 'மார்க்சிஸ்டு' கட்சித் திட்டம், விதி:112) படிப்படியாக செயல் தந்திரத்தையே லட்சியமாகக் கொண்டு விட்டார்கள்.

'மார்க்சிஸ்டு' கட்சி தொடங்கப்பட்டு 30 ஆண்டுகளுக்கு மேலாகியும் கூட, 'தற்போதைய முதலாளித்துவ - நிலப்பிரபுத்துவ அரசை அகற்றி விட்டு புதிய ஜனநாயக அரசை நிறுவுவதற்கான போராட்டம்' எதுவுமே நடக்கவில்லை. மாறாக மே. வங்கம், கேரளா, திரிபுரா ஆகிய மாநிலங்களில் 'இடதுசாரி' கூட்டணி அரசை நிறுவும் செயல் தந்திர நோக்கம்தான் நிறைவேறியுள்ளது. தமிழகத்தில் தி.மு.க., அ.தி.மு.க., ம.தி.மு.க. என்று மாறிமாறி ஆதரித்து ஓட்டுப் பொறுக்குவது, மத்தியில் ஜனதா, தேசிய முன்னணி என்று வெளியிலிருந்து ஆதரிப்பது என்று முன்னேறி, இப்போது காங்கிரசு ஆதரிக்கும் தேவேகௌடா அரசை ஆதரிப்பது என்று 'இடதுகள்' முன்னேறி விட்டனர். கடைசியில் புதிய ஜனநாயகப் புரட்சி இலட்சியம் கிடப்பில் போடப்பட்டு 'இடதுசாரி' ஆதரவு கூட்டணி அரசை உருவாக்குவதே போலிகளின் இலட்சியமாகிவிட்டது. இதற்கான தேர்தல் கூட்டணிகள்,



பாட்டாளி வர்க்கத் தலைவராகச் சித்தரிக்கப்படும் ஜோதிபாசுவுக்கு கம்யூனிஸ்ட் கட்சியில் இருப்பது துரதிருஷ்டமானதாம்!

அதிகாரத்துக்கான பேரங்கள் - பேச்சுவார்த்தைகள் என்று தரகு வேலை செய்வதே கட்சித் தலைவர்களின் முக்கிய வேலையாக மாறிவிட்டது; தேவே கௌடா அரசுக்கு குறைந்தபட்ச திட்டம் வகுக்கும் ஆலோசகர்களாகவும், இக்கூட்டணி அரசைக் காப்பாற்ற இதர கட்சிகளுடன் பேரம் நடத்தும் தரகர்களாகவும் மாறிவிட்டனர்.

இதையே நாசூக்காக, ''காங்கிரசுக்கும் ஐ.மு. அரசுக்கும் ஓர் இணைப்புப் பாலமாக நாங்கள் செயல்படுவோம்'' என்று ''பீப்பிள்ஸ் டெமாகிரசி'' ஏட்டில் 'மார்க்சிஸ்ட்' கட்சி பொதுச் செயலாளர் சுர்ஜித் எழுதுகிறார்.

### காங்கிரசு எதிர்ப்பு கந்தலாகிப் போனது

போலிகள் புரட்சியைப் பூசையறையில் வைத்தது ஒருபுறமிருக்கட்டும். இப்போது காங்கிரசு எதிர்ப்புக் கொள்கையையும்கூட கைவிட்டு விட்டார்கள். ''பிற்போக்கு காங்கிரசும் மதவாத பாரதீய ஜனதாவும் எதிரிகள்; இதிலே யாருடனும் எந்த வகையிலும் சமரசமே கிடையாது; இரண்டுமே சமமான எதிரிகள்தான்!'' என்று கொள்கைச் சவடால் அடித்து வந்த 'மார்க்சிஸ்டு'கள், இப்போது தமது இலட்சியக் கொள்கையை சந்தர்ப்பவாதமாகக் குப்பையில் வீசியெறிந்து விட்டனர். ''வகுப்புவாத சக்திகள்தான் இன்று பிரதான அபாயமாக உள்ளது. வகுப்புவாத சக்திகளிடமிருந்து நாட்டைக் காப்பதுதான் ஜனநாயக சக்திகளின் முக்கிய கடமையாக உள்ளது'' என்று புதிய கொள்கை விளக்கம் அளிக்கிறார் 'மார்க்சிஸ்டு' கட்சிப் பொதுச் செயலாளரான சுர்ஜித்.

''பாரதீய ஜனதா - காங்கிரசு இரண்டையுமே சமமான எதிரிகளாகக் கருதுவது தவறானது. இதிலே பாரதீய ஜனதாதான் மிகப் பெரிய எதிரி'' என்று காங்கிரசுடன் கூட்டுறவை ஆதரித்த சைபுதீன் சவுத்திரி போன்ற முக்கிய தலைவர்கள் 'மார்க்சிஸ்ட்' கட்சியில் ஓரங்கட்டப்பட்டனர். அந்த அளவுக்கு தாங்கள் காங்கிரசு - பாரதீய ஜனதா எதிர்ப்புக் கொள்கையில் உறுதியாகவும் தீவிரமாகவும் இருப்பதாகக் காட்டிக் கொண்டனர். ஆனால் தீவிரம் காட்டிய இக்கொள்கை இன்று திவாலாகி தோற்றுப் போய்விட்டது. நாட்டைச் சூழ்ந்துள்ள வகுப்புவாத அபாயத்தை முறியடிக்க காங்கிரசுடன் மறைமுகக் கூட்டுச் சேர்வதில் தவறில்லை என்று தமது சந்தர்ப்பவாத சதிராட்டத்தை நியாயப்படுத்த 'மார்க்சிஸ்டுகள்' கிளம்பிவிட்டனர்.

### சிவப்புச் சாய காங்கிரசுக்காரர்கள்

வகுப்புவாத சக்திகளை முறியடிப்பது என்ற பெயரில் காங்கிரசுடன் சேர்ந்து கொண்டு ஐ.மு. அரசை ஆதரிக்கக் கிளம்பிய போலிகள், இப்போது காங்கிரசின் மக்கள் விரோதக் கொள்கைகளையே ஆதரிக்கக் கிளம்பிவிட்டனர். தேவே கௌடா அரசு அறிவித்துள்ள கொள்கைகள் அனைத்துமே காங்கிரசு கொள்கையின் மறுபதிப்புதான். முற்போக்கு சவடால்களுடன் உள்ளதைத் தவிர இதற்கும் காங்கிரசின் கொள்கைக்கும் அடிப்படையில்



படிப்பகம்

www.padippakam.com

வேறுபாடு ஏதும் கிடையாது. ஆனாலும் இக்கொள்கைகள் ஏதோ முற்போக்கானதைப் போல போலிகள் சித்தரிக்கக் கிளம்பி விட்டனர்.

போலிக் கம்யூனிஸ்டுகளின் ஆதரவோடு ஐக்கிய முன்னணி அரசு அறிவித்துள்ள குறைந்தபட்ச பொதுத் திட்டத்தில் அரசுத் துறையைப் பாதுகாப்பது, காஷ்மீர் மற்றும் வடகிழக்கு மாநிலப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது, மதச் சார்பின்மை, மத்திய - மாநில உறவுகளைச் சீரமைப்பது, கூட்டாட்சி முறையை வலுப்படுத்துவது, வறுமை ஒழிப்பு, சமூகநீதி, வேலையின்மை ஒழிப்பு, நிலச் சீர்திருத்தம், கிராமப்புற விவசாய வளர்ச்சி முதலான அம்சங்கள்தான் உள்ளன. இதை எந்தக் கட்சியும் எதிர்க்காது; இப்படி எல்லோரும் ஏற்கக்கூடிய பொத்தாம் பொதுவான அம்சங்களைக் கொண்டதாகத்தான் குறைந்தபட்ச பொதுத் திட்டம் உள்ளது. இதிலே அந்நிய மூலதன எதிர்ப்பு, நாடு மறுகாலனியாக்கப்படுவதற்கு எதிர்ப்பு, பாபர் மசூதியை மீண்டும் கட்டிக் கொடுத்து முஸ்லீம்களிடம் ஒப்படைப்பது, இந்துவெறி அமைப்புகளுக்குத் தடைவிதிப்பது என்று குறிப்பாக எந்தத் திட்டமும் இல்லை. இந்த லட்சணத்தில் தங்களது ஆலோசனையுடன் இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாகப் போலிகள் பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள்.

தற்போதைய தேவேகௌடாவின் கூட்டணி அரசானது, வலதுசாரி காங்கிரசும் 'இடதுசாரி' கட்சிகளும் ஆதரிக்கும் பிராந்தியக் கட்சிகளின் மையவாத அரசுதான். காங்கிரசு கொள்கைகளிலிருந்து அதன் கொள்கைகள் எவ்வகையிலும் மாறுபட்டதல்ல என்பதை அதன் ஆரம்ப அறிகுறிகளே அம்பலப்படுத்திக் காட்டுகின்றன. நேற்றுவரை காங்கிரசில் இருந்து நாட்டை ஏகாதிபத்தியங்களுக்கு மறுகாலனியாக்கி வந்த சிதம்பரம்தான் இன்று ஐ.மு. அரசில் நிதியமைச்சராகியுள்ளார். தொழிலமைச்சராகியுள்ள முரசொலி மாறன், தாராளமயக் கொள்கையை மேலும் விரிவுபடுத்துவோம் என்கிறார். கர்நாடகத்தில் விவசாய விளைநிலங்களைக்கூட ஏகாதிபத்தியங்களுக்காக நாசமாக்கும் புதிய நிலச் சீர்திருத்தக் கொள்கையைக் கொண்டு வந்த தேவேகௌடாதான் இன்று பிரதமராகியுள்ளார். பதவியேற்றதுமே தென்னகத்தின் மிகப்பெரிய சாராய அதிபரான விஜய் மல்லையாவுடன் அம்பாணியின் தனி விமானத்தில் பறந்தார். இவர்தான் ''மண்ணின் மைந்தர்'', ''எளிமையான விவசாயி'' என்று முதலாளித்துவப் பத்திரிகைகளால் ஏற்றிப் போற்றப்படுகிறார். போலிகளும் வெட்கமின்றி இதற்குக் கைத்தாளம் போடுகின்றனர்.

ஐ.மு. அரசின் கொள்கைகள் மட்டுமல்ல, காங்கிரசு, பாரதிய ஜனதா, ஜனதா தளம், 'மார்க்சிஸ்டு' ஆகிய கட்சிகளுக்கிடையே பெரிய அளவில் கொள்கை வேறுபாடு எதுவும் கிடையாது. புதிய பொருளாதாரக் கொள்கை, அந்நிய முதலீடுகளை வரவேற்று ஆதரிப்பது, காஷ்மீர் பிரச்சினை, வடகிழக்கு மாநிலங்களின் விவகாரம், பாகிஸ்தானுடன் உறவு, தேச ஒற்றுமை, பிரிவினைவாத எதிர்ப்பு - என அனைத்திலும் இக்கட்சிகள் ஒரே அலைவரிசையில்தான் நிற்கின்றன. பிரச்சினையை அணுகும் முறையில்தான் இக்கட்சிகளுக்கிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளனவே தவிர, அடிப்படையான கொள்கையில் எந்த வேறுபாடும் கிடையாது. சுருக்கமாகச் சொன்னால், சிவப்புச் சாயம் பூசிய நாடாளுமன்ற ஜனநாயக காங்கிரசுக்காரர்களாக போலிக் கம்யூனிஸ்டுகள் சீரழிந்து விட்டனர்.


ஐக்கிய முன்னணியை ஆதரிக்கவும் அரசில் பங்கேற்கவும் வி.பி.சிங்குடன் பேரங்கள் நடத்தும் ஜோதிபாசு மற்றும் இந்திரஜித் குப்தா

### நெருக்கடியில் சிக்கிய போலிக் கம்யூனிஸ்டுகள்

வேறென்ன செய்வது? கேடுகெட்ட நாடாளுமன்ற சாக்கடையில் விழுந்து கிடப்பதால் வந்த வினை இது. இனி இதிலிருந்து மீளவும் வழியில்லை. இருப்பதைத் தக்க வைத்துக் கொண்டால் போதும் என்ற பரிதாபகரமான நிலைக்கு போலிகள் தள்ளப்பட்டுள்ளனர். மத்திய அரசில் பங்கேற்கும் வகையில் தீர்மானகரமான கட்சியாக அவர்களால் ஒரு போதும் மாறவும் முடியாது. 3 மாநிலங்களை விட்டு எல்லை தாண்டாத கட்சியாக அது சுருங்கிவிட்டது. மற்ற மாநிலங்களிலும் வளர முடியாதபடி தமது சந்தர்ப்பவாதக் கொள்கைகளால் நெருக்கடியில் சிக்கித் தவிக்கின்றனர்.

புரட்சியின் கோட்டையாகச் சித்தரிக்கப்பட்ட மே. வங்கத்திலேயே தொழிலாளர்கள் நிறைந்த பகுதியில் இம்முறை போலிகள் படுதோல்வி அடைந்துள்ளனர். வெற்றி பெற்ற தொகுதிகளில்கூட வாக்குகள் முன்னைவிடக் குறைந்துவிட்டன. கேரளத்தில் 'மார்க்சிஸ்டு' கட்சியின் முக்கிய தலைவரான அச்சுதானந்தன் படுதோல்வி அடைந்துள்ளார். அங்கு 'இடது முன்னணி' வெற்றி பெற்ற போதிலும் கட்சிக்குள் முதல்வர் பதவிக்கான நாய்ச்சண்டை முற்றியதால், 10 நாட்களுக்கு மேலாகியும் ஆட்சியமைக்க முடியவில்லை. பின்னர் சமரசங்கள், சரிகட்டல்களுக்குப் பிறகு நாயனார் முதல்வராகியுள்ளார்.

இதுதவிர, மே.வங்கத்தில் இடதுசாரி முன்னணியிலுள்ள கட்சிகளிடம் 'மார்க்சிஸ்டுகள்' பெரிய அண்ணனாக அதிகாரம் செலுத்தி வந்த நிலைமையும் இப்போது மாறிவிட்டது. 'மார்க்சிஸ்டு'களின் முடிவை மீறி வலதுகள் மட்டுமின்றி, பார்வர்டு பிளாக், புரட்சி சோசலிஸ்டு கட்சி ஆகியனவும் ஐ.மு. அரசில் பங்கேற்பது பற்றி பரிசீலிக்கின்றன. இந்நிலையில் இருப்பதைத் தக்கவைத்துக் கொள்வது என்கிற கடைகோடி நிலைக்கு போலிகள் தள்ளப்பட்டுள்ளனர். அதன் விளைவாக, புரட்சிகர சவடால்களைக் கூட கைவிட்டுவிட்டு, மேற்கு ஐரோப்பிய பாணி சமூக ஜனநாயகக் கட்சிகளைப் போல சீரழிந்து கிடக்கிறார்கள். இனி கட்சியின் பெயரையும் கொடியையும் மாற்றிக் கொள்ள வேண்டியதுதான் அவர்களிடம் பாக்கியிருக்கிறது.

• குமார்



படிப்பகம்

www.padippakam.com

## தூத்துக்குடி கலவரம்:

# பின்னணியில் ஸ்டெர்லைட் முதலாளிகள்

தேர்தலையொட்டி தூத்துக்குடி நகரில் எழுந்த கலவரம், கிட்டத்தட்ட 20 நாட்களுக்கும் மேலாகக் கொழுந்து விட்டு எரிந்து தற்பொழுது தணிந்து விட்டது. இக்கலவரத்தின்பொழுது ரவிக்குமார் என்ற மீனவ இளைஞர் போலீசாரின் துப்பாக்கிச் சூட்டில் இறந்து போனதோடு, பல கோடிக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் நாசமாயின.

மீனவர்களான பரதர் சாதியினருக்கும் நாடார்களுக்கும் இடையே நடந்த இம்மோதலுக்கு சாதிப் பகைமை - போட்டிதான் காரணம் எனத் திரித்துப் பெரும்பாலான பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன. ஆனால் தூத்துக்குடி நகரில் அமையவுள்ள ''ஸ்டெர்லைட் இண்டஸ்ட்ரீஸ்'' எனும் தாமிர உருக்காலையை எதிர்த்து எழுந்து வரும் தூத்துக்குடி மக்களின் ஒற்றுமையை சாதிரீதியாகப் பிளந்து, போராட்டத்தைப் பலவீனப்படுத்தும் நோக்கத்துடன்தான் இக்கலவரம் தூண்டிவிடப் பட்டது; ஓட்டுக்கட்சிகளில் செல்வாக்குடன் உள்ள நாடார் சாதி பிரமுகர்கள் - ஸ்டெர்லைட் இண்டஸ்ட்ரீஸ் அதிபர்களான மார்வாரிகள் இருவரும் இக்கலவரத்தின் பின்னணியாக இருந்தனர் என்றும் செய்திகள் வெளிவந்துள்ளன.

தூத்துக்குடி நகரில் இத்தாமிர உருக்காலை அமைவது, அப்பகுதி மீனவர்களுக்கு ''வாழ்வா? சாவா?'' எனும் நிலையைத் தோற்றுவித்துள்ளது. காரணம் இவ்வாலையில் இருந்து வெளியேறும் கழிவு கடலில் கொட்டப்படும் பொழுது, மீன்களும் பிற கடல்வாழ் உயிரினங்களும் அழிந்து போகும் அபாயமுள்ளது. இதனால் பெருவாரியான மீனவர்கள் ஸ்டெர்லைட் எதிர்ப்பியக்கத்தில் அணிதிரண்டு வருகின்றனர். இரு மாதங்களுக்கு முன்பாக, இம்மீனவர்கள் இவ்வாலைக்கு மூலப்பொருட்கள் ஏற்றி வரும் கப்பலைத் தடுக்கும் நோக்கோடு, நடுக்கடலில் 15 மணி நேரத்துக்கும் மேலாக கப்பல் மறியல் போராட்டம் நடத்தினர்.

தூத்துக்குடியின் பிற பகுதி மக்களிடமும் இவ்வியக்கத்திற்கு ஆதரவு பெருகி வருகிறது. கடந்த மார்ச் மாதம் ஆலையைத் தடை செய்யக் கோரி 1000-க்கும் மேற்பட்ட மாணவர்கள் சாலை மறியலில் ஈடுபட்டதால், நகருக்கு வருவதை ஜெயா ரத்து செய்து விட்டுத் திரும்பிப் போய்விட்டார். தொடர் ஆர்ப்பாட்டம், கடையடைப்புப் போராட்டம் என இவ்வியக்கம் அப்பகுதி எங்கும் பற்றிப் படர்ந்து வருகிறது.

இந்நிலையில் தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதிக்கு நாடார் சாதியைச் சேர்ந்த பெரியசாமி, ஹென்றி, சம்பத்குமார் மூவரும் தி.மு.க., அ.தி.மு.க., ம.தி.மு.க. வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டனர்; இவர்கள் மூவருமே ஸ்டெர்லைட் ஆலை நிர்வாகத்துடன் மறைமுகத் தொடர்பு வைத்திருப்பதாகவும், இலஞ்சம் பெறுவதாகவும் நம்பப்படுகிறது. இவர்களுள் குறிப்பாக தி.மு.க. வேட்பாளராக நிறுத்தப்பட்ட பெரியசாமி, ஸ்டெர்லைட் நிறுவனத்திற்கு கூலித் தொழிலாளர்களை வேலைக்கு அனுப்பும் ''காண்டிராக்ட்'' எடுத்துள்ளார்; தேர்தலின் பொழுது அவ்வாலைக்குச் சொந்தமான கார்கள் தி.மு.க.வின் பிரச்சாரத்திற்கும் பயன்படுத்தப்பட்டன

இதன் காரணமாக மீனவர்கள் தங்களின் எதிர்ப்புக் குரல் சட்டசபையில் ஒலிக்க வேண்டும் என்பதற்காக, போனோவெஞ்சர் ரோச் என்பவரை சுயேச்சை வேட்பாளராக நிறுத்தினர். ராச், ஸ்டெர்லைட் ஆலை எதிர்ப்பை மையப்படுத்தி தொகுதி மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்தார். ரோச் தேர்தல் களத்தில் குதித்த பின்பு அவருக்கும் பெரியசாமிக்கும்(தி.மு.க.) இடையேதான் கடுமையான போட்டி நிலவியது. தேர்தல் முடிவில் ரோச் 35,000 வாக்குகள் பெற்று இரண்டாவது இடத்தைப் பிடித்தார்.

தேர்தல் நாளன்று கள்ள ஓட்டுப் போட்டதற்காக அ.தி.மு.க. வேட்பாளர் ஹென்றியின் வீட்டின் மீது குண்டு வீசப்பட்டதையடுத்து, கலவரத்திற்கு பிள்ளையார் சுழி போடப்பட்டது. ஹென்றி தனது தேர்தல் அலுவலகத்திலேயே அடியாட்களையும், ஆயுதங்களையும், வெடி குண்டுகளையும் மறைத்து வைத்து மீனவர்களைத் தாக்கியுள்ளான். தனது குண்டர்களை போலீசு பிடித்துச் சென்றபொழுது போலீசு நிலையத்தையே நேரடியாகத் தாக்கி கைது செய்யப்பட்ட ரௌடிகளை மீட்டு வந்தான்.

தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்ட பின், ஹென்றியின் இடத்தை தி.மு.க. எம்.எல்.ஏ.வாக வெற்றி பெற்ற பெரியசாமி எடுத்துக் கொண்டார். உள்ளூர் ரௌடியாக தூத்துக்குடி நகரை வலம் வந்த இந்த பெரியசாமி, மூன்று நட்சத்திர விடுதி, லாரிகள், பேருந்துகள் என பல கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களுக்கு இன்று அதிபதி. ஜெயலலிதா ஆட்சியின்பொழுது தூத்துக்குடி ''மதுரா கோட்ஸ்'' ஆலையில் நடந்த வேலை நிறுத்தத்தை முறியடிக்க, தி.மு.க. அனுதாபிகளைக் கொண்டு மில்லை இயக்க நிர்வாகத்திற்கு உதவியவன். இந்தக் கலவரத்தில் இந்த அரசியல் ரௌடியின் பங்கு குறித்து போலீசோ, அரசோ, பத்திரிகைகளோ யாரும் அக்கறை கொள்ளவில்லை.

இக்கலவரத்தில் மீனவர்கள் நிறைந்து வாழும் தூத்துக்குடியின் கிழக்குப் பகுதிதான் தாக்குதல் இலக்காக இருந்தது. பாத்திமா நகர், வண்ணார் தெரு, பி.பி.எம்.டி. கிட்டங்கி, புதுக்கிராமம், பூபாலராயபுரம், முத்துக் கிருஷ்ணாபுரம், சண்முகபுரம் பகுதிகளில் மட்டும் 50 கோடி ரூபாய் பெறுமான சொத்துக்கள் நாசமாகியுள்ளன.

அமைச்சர்கள் ஆலடி அருணாவும், ஜெனிபர் சந்திரனும் கலவரப்

தமிழக அமைச்சர்களைக் கேள்விகளால்
திணறடிக்கும் தூத்துக்குடி நகர மக்கள்!





படிப்பகம்

www.padippakam.com

பகுதிகளைப் பார்வையிட்டபொழுது, ஸ்டெர்லைட் மார்வாரிகள் - தி.மு.க. எம்.எல்.ஏ பெரியசாமி கூட்டு பற்றி ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. மாறாக, கலவரம் பற்றி ஆராய மாவட்ட நீதிபதி தலைமையில் விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளதைக் கூறித் தப்பித்துக் கொண்டனர்.

ஏனெனில், பெரியசாமி போன்ற அரசியல் ரௌடிகளின் துணையின்றி தி.மு.க., நாற்காலி அரசியல் நடத்த முடியாது. ஓட்டுக்கட்சி அரசியலின் இழிந்த நிலை இது. மேலும் ஸ்டெர்லைட் போன்று ஜெயா ஆட்சிக் காலத்தில் மக்கள் மற்றும் நாட்டு நலனில் அக்கறையின்றி அனுமதி வழங்கப்பட்ட தாபர் - டியூபாண்ட், ஃபோர்டு கார் தொழிற்சாலைகளையும் தடை செய்ய தி.மு.க. அரசு விரும்பவில்லை. ஜெயா போன்றே பன்னாட்டு முதலாளிகளுக்குப் பாய் விரிப்பதுதான் தி.மு.க.வின் கொள்கையும்.

எனவே, பெரியசாமி - ஹென்றி போன்ற அரசியல் கழிசடைகள் - நயவஞ்சகர்களின் பிரித்தாலும் சூழ்ச்சிகளுக்குப் பலியாகாமல், மக்களின் ஒற்றுமையைக் கட்டிக் காத்து, ஸ்டெர்லைட் எதிர்ப்பியக்கத்தை மேலும் போர்க்குணமிக்கதாக எடுத்துச் செல்ல, நாட்டு நலனில் அக்கறை கொண்ட தூத்துக்குடி மக்கள் முன் வர வேண்டும்!

● ரஹீம்


வெளி வந்து விட்டது!

கம்யூனிசம் தோற்றதா?
முதலாளித்துவம் வென்றதா?

அதிகார மாற்றத்திற்குப் பின்
ரசிய சமூகச் சீரழிவுகளைச்
சித்தரிக்கும் படைப்பு!

விலை ஆறு ரூபாய்.

கீழைக்காற்று வெளியீட்டகம்,
10, அவுலியா சாகிபு தெரு,
எல்லீசு சாலை,
சென்னை - 600 002.


# ஆடு-மாடு திருடும் பொய்கை அரசூர் பண்ணையார்!

விழுப்புரத்திற்கு அருகிலுள்ள பொய்கை அரசூர் கிராமத்தைச் சேர்ந்த பண்ணையார் இராமலிங்க நாயுடு, 30 தாழ்த்தப்பட்ட குடும்பங்களின் மீது வன்முறைத் தாக்குதலை ஏவி, ஊரைவிட்டுத் துரத்தி விட்டதை சென்ற இதழில் அம்பலப்படுத்தி எழுதியிருந்தோம்.

பண்ணையார் இராமலிங்க நாயுடு, கணக்குப்பிள்ளை தண்டபாணி, முருகேசன் தலைமையிலான இந்த ஆதிக்க வெறிபிடித்த கும்பல், அத்தாழ்த்தப்பட்ட மக்களின் வீடுகளின் மேற்கூரைகளைச் சேதப்படுத்தியும், ஜன்னல்கள் - வாசற்கதவுகளைப் பிடுங்கிச் சென்றும் விட்டது. நெல் - அரிசி போன்ற தானியங்களையும், ஆடு - மாடுகளையும் திருடிச் சென்று வயிறு புடைக்கத் தின்று விட்டு, வீட்டிற்குள்ளேயே மலம் கழித்து, தனது இழிந்த வக்கிர புத்தியைக் காட்டி வருகிறது.




திருடிச் சென்ற ஆடு - மாடுகளில் தின்றது போக எஞ்சி நிற்பதை மடப்பட்டுச் சந்தைக்கு ஓட்டிச் சென்று விற்றும் கொள்ளையடித்து வருகிறது நாயுடு கும்பல். சந்தை குத்தகைதாரர் சந்தேகங் கொண்டு நாயுடு கும்பலை விசாரித்த பொழுது, ''பொய்கை அரசூர் பிரச்சினையில் ஊரை விட்டு வெளியேறியவர்களின் ஆடு - மாடுகள் இவை; தீனி போட முடியாததால் வித்து பணத்தை பேங்க்-ல போட்டு வைக்கப் போகிறோம்'' எனப் புளுகியுள்ளனர், அவர்கள்.

நாயுடு கும்பலின் இந்தப் பித்தலாட்டம் 19.5.96 அன்று சந்தையில் அம்பலமாகி சந்தி சிரித்தது. அன்று சந்தைக்கு ஆடு - மாடுகளைத் திருட்டுத்தனமாக விற்க வந்தவர்களில் ஐந்து பேரை விவசாயிகள் விடுதலை முன்னணித் தோழர்கள் விரட்டிப் பிடித்தனர். அத்திருடர்களிடமிருந்து 10 மாடுகள், 7 ஆடுகளைத் தோழர்கள் கைப்பற்றி மீட்டனர். இத்திருட்டுக் கும்பலைப் பிடிக்க உதவிய சந்தை குத்தகைதாரர், ஊழியர்கள், பொதுமக்கள் அனைவரும் நாயுடு அடியாட்களின் வாயில் செருப்பைத் திணித்து, அடித்து அவமானப்படுத்தினர்.

பிடிபட்ட இந்த ஐந்து பேரும், ''இராமலிங்க நாயுடுவும், கிராம முன்னாள் துணைத் தலைவர் முருகேசனும் ஆடு - மாடுகளை விற்கச் சொல்லி 14 பேரை அனுப்பி வைத்தனர்; மீதி ஒன்பது பேர் பணத்துடன் தப்பிவிட்டனர்'' எனப் பொதுமக்களின் முன் உண்மைகளை ஒப்புக் கொண்டனர்.

அம்பலப்பட்டுப் போன நாயுடு கும்பல், வி.வி.மு.வை ஒழித்துக் கட்ட சதி முயற்சிகளில் இறங்கியுள்ளது. 85 வயதான அஞ்சமுத்து என்ற வயதான முதியவரை, வி.வி.மு.வினர் அடித்துக் கொன்று விட்டதாகச் சித்தரித்துப் பொய் வழக்குப் போட முயன்று வருகிறது; இதற்காக இயற்கையாகவே இறந்து போன அம்முதியவரின் பிணத்தைக் கல்லாலும் உருட்டுக் கம்புகளாலும் தாக்கி காயப்படுத்தி, அரசூர் கூட்டு ரோட்டில் அப்பிணத்தைக் கள்ளத்தனமாக கொண்டு வந்து போட்டு நாடகமொன்றை அரங்கேற்றியது நாயுடு கும்பல்.

இவர்களின் சட்டபூர்வ அடியாட்படையாக இருக்கும் திருவெண்ணெய் நல்லூர் போலீசும், இவ்வழக்கில் எப்படியாவது வி.வி.மு. தோழர்களைக் கைது செய்துவிட வேண்டும் என வரிந்து கட்டிக் கொண்டு சட்ட நுணுக்கங்களை ஆராய்ந்து வருகிறது. தகவல்: விவசாயிகள் விடுதலை முன்னணி, காரப்பட்டு.



படிப்பகம்

www.padippakam.com



## "பித்தப்பசு" விவகாரம்: ஏகாதிபத்தியக் கொள்ளையின் எதிர்விளைவு

ஏகாதிபத்திய நாடான பிரிட்டனை உலுக்கும் ''பித்தப் பசு'' விவகாரம் அந்நாட்டின் பொருளாதாரத்தையே ஆட்டங்காணச் செய்துவிட்டது. இறைச்சிக்கான பசுக்களை மூளை பூஞ்சான நோய் (BSE) தாக்கி, அதன் இறைச்சியை உண்பவர்கள் மர்மமான முறையில் மாண்டு வருவதால், பீதியடைந்த பிரிட்டிஷ் அரசு, நோய்க்குக் காரணமான பசுக்கள் அனைத்தையும் வெட்டிக்கொல்லுமாறு உத்திரவிட்டுள்ளது. கடந்த மே மாதத்தில் மட்டும் அந்நாட்டில் ஒரு கோடிக்கும் மேலான பசுக்கள் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளன. இதனால் பால் பண்ணையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதோடு, 25,000-க்கும் மேற்பட்ட பால் பண்ணைத் தொழிலாளர்களும் கறிவெட்டும் தொழிலாளர்களும் வேலையின்றித் தவிக்கின்றனர். ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் அனைத்தும் பிரிட்டனின் இறைச்சியை வாங்குவதில்லை என்று தடை விதித்துள்ளன. உலகின் இறைச்சி ஏற்றுமதியில் முக்கிய இடத்தை வகிக்கும் பிரிட்டனின் கால்நடைத் துறை இதனால் பெருத்த பாதிப்புக்குள்ளாகியுள்ளது. பிரிட்டன் மட்டுமின்றி பிரான்சு, ஜெர்மனி, ஹாலாந்து, டென்மார்க், சுவிட்சர்லாந்து என ஐரோப்பா கண்டம் முழுவதும் இந்நோய் படிப்படியாக பரவி வருவதைக் கண்டு ஏகாதிபத்திய உலகமே பீதியில் உறைந்து போயுள்ளது. ஏனெனில் இந்நோய்க்கு இதுவரை மருந்து எதுவும் கண்டறியப்படவில்லை.

மேலை நாடுகளில் கால்நடை வளர்ப்புத் தொழில்




நோய் தாக்கிய பசுக்களைக் கொன்ற பின்னர் வெறிச்சோடி கிடக்கும் கால்நடைப் பண்ணை

என்பது, குறுகிய காலத்திற்குள் கால்நடைகள் சாகும் வரை சுரண்டுகிற ஈவிரக்கமற்ற கொள்ளைச் சுரண்டலாகும். அடைப்பூட்டு (Stall Fed-Feeding) முறையில் வளர்க்கப்படும் கால்நடைகள் அசையவோ, மேய்ச்சலுக்கோ செல்ல முடியாது. தின்று கொழுத்து வீங்கத்தான் முடியும். இந்நிலையில் பிரிட்டனின் முன்னாள் பிரதமரான, 'இரும்புத் தலைவி' தாட்சர் ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட சிக்கன சீரமைப்பு நடவடிக்கைகளின் காரணமாக மலிவான தீவனம், அதிக லாபம் என்று தீவனத் தயாரிப்புத் தொழில் மாறியது. தீவனத்தில் புரதச் சத்தை அதிகரிக்க கால்நடைகளின் எலும்புகளே மறுசுழற்சியாகப் பயன்படுத்தப்பட்டன. இது தவிர கறியையும் பாலையும் கூட்டுவதற்காக இயக்குநீர்களும், ஊக்க நீர்களும் கால்நடைகளுக்கு ஊசி மூலம் ஏற்றப்பட்டன. இயற்கைக்கு விரோதமான இத்தகைய கொள்ளைச் சுரண்டல் முறைகளால் கால்நடைகளின் நோய் எதிர்ப்புத் திறன் குறைந்து, நுண்ணுயிர்த் தாக்குதலால் நோய் வாய்ப்படுகின்றன. 1990-ல் 25,000 பசுக்களைத் தாக்கிய இந்நோய், இன்று ஒரு கோடிக்கும் மேலான பசுக்களைக் காவு கொண்டுவிட்டது.

ஒரு தொழிற்சாலை போல், கால்நடைகளை ஈவிரக்கமின்றிச் சுரண்டும் ஏகாதிபத்திய கொள்ளை லாப உற்பத்தியின் எதிர்விளைவுதான் இந்நோய்! ஏகாதிபத்தியங்கள் தங்களது சவக்குழியைத் தாங்களே வெட்டி வைத்துக் கொண்டுள்ளன என்பதை இந்தப் பித்தப்பசு நோய் விவகாரம் நிரூபித்துக் காட்டுகிறது.

## நிலக்கண்ணி வெடிகள்: தொடரும் சாவு வியாபாரம்

இந்தியாவின் அண்டை நாடான ஆப்கானில் விவசாயிகள் விளைநிலங்களில் பயிரிட முடிவதில்லை. கம்போடியாவில் குழந்தைகள் மைதானத்தில் விளையாட முடிவதில்லை. மொசாம்பிக், அங்கோலாவில் மக்கள் பயணம் செய்யவே முடிவதில்லை. ஏனெனில் இந்நாடுகளில் நிலத்தடியில் புதைக்கப்பட்டுள்ள கண்ணி வெடிகள் எந்த நேரத்தில் வெடிக்கும் என்று யாருக்கும் தெரியாது. இந்நாடுகளில் தொடரும் உள்நாட்டு போரில் நிலக்கண்ணி வெடிகள் பரவலாக புதைக்கப்பட்டுள்ளதால் மக்கள் வெளியில் நடமாடவே அஞ்சுகிறார்கள்.

நிலக்கண்ணி வெடிகள் மலிவானது. அதே சமயம் சக்திமிக்கது. அதற்கு எதிரி யார், நண்பர் யார் என்று பகுத்துப் பார்க்கத் தெரியாது. காலடிபட்டால் யாரையும் பலி கொண்டு விடும். இதுவரை உலகின் 64 நாடுகளில் மட்டும் 10 கோடி பேர் நிலக்கண்ணி வெடிகளுக்குப் பலியாகியுள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் மட்டும் 15 லட்சம் அப்பாவி மக்கள் கண்ணி வெடிகளால் மாண்டு போயுள்ளனர். ஆப்கான், மொசாம்பிக், போஸ்னியா, கம்போடியா, லைபீரியா, சூடான் முதலான நாடுகளில் நாளொன்றுக்கு 50-க்கும் மேற்பட்டோர் கண்ணி வெடிகளால் படுகாயமடைகின்றனர். கம்போடியாவில் 250 பேருக்கு ஒருவர் கண்ணி வெடிகளால் கை, கால்களை இழந்து முடமாகிப் போயுள்ளதாக ஐ.நா. சபையின் அறிக்கை கூறுகிறது.

எதிரியை நிலைகுலையச் செய்யும் நோக்கத்தோடு வைக்கப்படும் கண்ணிவெடிகளால் அப்பாவி பொது மக்களுக்கு நேரும் அபாயத்தைக் கருத்தில் கொண்டு, அண்மையில் 53 நாடுகள் ஜெனிவாவில் கூடி, கண்ணி வெடிகளைத் தடை செய்வதற்கான பேச்சுவார்த்தை நடத்தின. ஆனால் அமெரிக்கா மற்றும் பிற ஏகாதிபத்தியங்களின் போர் வெறிக் கொள்கையால் கண்ணி வெடிகளைத் தடை செய்யும் தீர்மானம் நிறைவேறாமல், கண்ணி வெடிகளுக்குக் கட்டுப்பாடுகள் விதிப்பதாக அது நீர்த்துப் போய்விட்டது. 120 நாட்களில் வெடிக்காவிட்டால் செயலற்றுப் போகும் வகையில் கண்ணி



படிப்பகம்



கண்ணி வெடிகளால் கால்களை இழந்து பரிதவிக்கும் ஆப்கான் மக்கள்

வெடிகளைத் தயாரிப்பதென இப்போது ஏகாதிபத்திய நாடுகள் தீர்மானித்துள்ளன. ஆனால் 120 நாட்களுக்குப் பிறகு மீண்டும் சக்தியேற்றி இவற்றைப் பயன்படுத்த முடியும் என்ற உண்மையைப் போட்டுடைத்து ஏகாதிபத்தியங்களின் பசப்பலை பல விஞ்ஞானிகள் அம்பலப் படுத்தி வருகின்றனர்.

ரஷ்ய வல்லரசுடனான பனிப்போர் முடிவுக்கு வந்த பின்னரும்கூட, நிலக்கண்ணி வெடி ஏற்றுமதியில் அமெரிக்காதான் முதலிடம் வகிக்கிறது. உலகெங்கும் புதைக்கப்பட்டுள்ள கண்ணி வெடிகளில் 25% க்கும் மேலானவை அமெரிக்கா தயாரித்தவைதான்! போஸ்னியாவில் நிலக்கண்ணி வெடிகளால் அமெரிக்க 'அமைதிப் படை' வீரர்கள் படுகாயமடைவதையும் பலியாவதையும் கண்டு ஒப்பாரி வைக்கும் அமெரிக்க அதிபர் கிளிண்டன், தனக்குப் பணிய மறுக்கும் வடகொரிய எல்லை முழுவதும் நிலக்கண்ணி வெடிகளைப் பயன்படுத்துமாறு தனது இராணுவத்துக்குக் கட்டளையிடுகிறார். 1999 முடிய நிலக்கண்ணி வெடிகளைத் தயாரிக்குமாறு அமெரிக்க இராணுவத் தலைமையகத்துக்குக் (பென்டகன்) கட்டளையிடுகிறார். போர்வெறியர்களான ஏகாதிபத்தியங்கள் உலகில் நீடிக்கும் வரை அதன் சாவு வியாபாரம் ஒருபோதும் அழிந்துவிடாது என்பதை இவை மீண்டும் நிரூபித்துக் காட்டுகின்றன.

## இருண்ட இலங்கையில் போராட்ட ஒளிக்கீற்று

உலக வங்கி, ஐ.எம்.எப்.ன் உத்திரவுப்படி, சிங்கள இனவெறி சர்வாதிகார சந்திரிகா அரசு மின்துறையைத் தனியாருக்குத் தாரைவார்க்க முடிவு செய்துள்ளதை எதிர்த்து இலங்கையின் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மின்வாரியத் தொழிலாளர்கள் கடந்த மே 29-ந் தேதி முதல் போராட்டத்தில் குதித்தனர். ஏற்கனவே பருவ மழை பொய்த்துப் போனதால் மின் உற்பத்தி செய்யும் நீர்த்தேக்கங்களில் தண்ணீர் இல்லாமல் கடுமையான மின் பற்றாக்குறை நிலவும் போது, தனியார்மயமாக்கலை எதிர்த்தும் ஊதிய உயர்வு கோரியும் தொழிலாளர்கள் நடத்திய போராட்டத்தால் இலங்கையே நான்கு நாட்களுக்கு இருளில் மூழ்கிப் போனது. பள்ளிகள், அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள், வானொலி - தொலைக்காட்சி நிலையங்கள் செயலற்று முடங்கிப் போயின. நீரேற்று நிலையங்கள் செயல்படாததால் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டு மக்கள் சந்திரிகா அரசு மீது வெறுப்பை உமிழ்ந்தனர். போராடும் மின் தொழிலாளர்களுக்கு ஆதரவாக இதர அரசு மற்றும் தனியார் துறை தொழிலாளர்கள் போராட்டத்தில் இறங்கப்போவதாக எச்சரித்தனர்.

பீதியடைந்த சந்திரிகா அரசு இராணுவத்தை ஏவி, போராட்டத்தை மிருகத்தனமாக ஒடுக்கியும், முன்னணியாளர்களை ஆயிரக்கணக்கில் கைது செய்தும் நிலைமையைச் சீரமைத்துவிட்டதாக மனப்பால் குடிக்கிறது. ஆனால் நாட்டை மறுகாலனியாக்கிவரும் அவரது கேடுகெட்ட கொள்கையாலும், நாளும் பெருகிவரும் விலையேற்றத்தாலும் இலங்கை மக்கள் போராட்ட எரிமலையாய்க் குமுறிக் கொண்டிருக்கிறார்கள்.

## பாரதீய ஜனதாவுக்குள் பதவிவெறி நாய்ச்சண்டை

கட்டுப்பாடுமிக்க தேசியக் கட்சியாகச் சித்தரிக்கப்படும் பாரதீய ஜனதாவில் நடந்துவரும் கோஷ்டிச் சண்டைகள் அக்கட்சியின் யோக்கியதையைச் சந்திசிரிக்க வைத்துவிட்டன. அதுவும் வாஜ்பாய் பிரதமராகப் பதவியேற்றதற்கு வரவேற்பளிக்கும் கூட்டத்திலேயே, அவர் கண் முன்னாலேயே, சட்டையைக் கிழித்துக் கொண்டு சண்டை போடும் அளவுக்கு நாறிப் போயுள்ளது.



ஆத்மராம் பட்டேல்

குஜராத்தில் முன்னாள் முதல்வர் கேசுபாய் பட்டேல் கோஷ்டிக்கும் அவரைப் பதவியிலிருந்து இறக்கிய சங்கர் சிங் வகேலா கோஷ்டிக்குமிடையே நீண்டகாலமாக கோஷ்டிச் சண்டை முற்றி வருகிறது. நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் பட்டேல் கோஷ்டியினர், வகேலா கோஷ்டி வேட்பாளர்களைத் தோற்கடிக்கும் நடவடிக்கையில் வெளிப்படையாக இறங்கியதோடு, தமது கோஷ்டி ஆதரவு சுயேட்சை வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்தனர். இதனால் ஆத்திரமடைந்த வகேலா கோஷ்டி, கட்சிக்குள்ளேயே தமது சாதிய அமைப்பை உருவாக்கி வலுப்படுத்திக் கொண்டு பட்டேல் கோஷ்டியைக் கட்சியை விட்டு நீக்குமாறு

www.padippakam.com



வலியுறுத்தி வந்தது. இதற்குப் பதிலடியாக பட்டேல் கோஷ்டி, கடந்த மே 20-ந் தேதியன்று முன்னாள் பிரதமர் வாஜ்பாய் பங்கேற்ற கூட்டத்தில் தமது குண்டர்களுடன் புகுந்து வகேலா கோஷ்டியைத் தாக்கியது.

''வகேலாவைக் கட்சியை விட்டு நீக்கு!'' என்று கோஷமிட்டுக் கொண்டு வசைமாரி பொழிந்த பட்டேல் கோஷ்டி, நாற்காலிகளை வீசியெறிந்து கைகலப்பில் இறங்கத் தொடங்கியது. வகேலா ஆதரவு அமைச்சரான ஆத்மராம் பட்டேலின் வேட்டியை உருவி ஓடஓட விரட்டித் தாக்கியது அக்கும்பல். மற்றொரு அமைச்சரான விபுல் சவுத்திரியின் கார் நொறுக்கப்பட்டது. குஜராத் பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவரான தத்தாஜி சிரன்தாசுக்குச் சரமாரியாக செருப்படி விழுந்தது. வகேலா ஆதரவு கட்சிப் பிரமுகர்களின் மனைவி மற்றும் குடும்பத்தாரிடம் இக்கும்பல் கீழ்த்தரமாகவும் முறைகேடாகவும் நடந்து கொண்டது. பலரது கைக்கடிகாரம், மோதிரம் மற்றும் நகைகள் பறிபோயின. பட்டேல் கோஷ்டியின் அராஜகத் தாக்குதலுக்கு எதிராக வகேலா கோஷ்டி எதிர்த்தாக்குதலில் இறங்கியதும், நிலைமை மேலும் மோசமாகி பொதுக்கூட்ட மைதானமே யுத்தக் களமாகிப் போனது. பின்னர் போலீசார் தடியடி நடத்தி இரு கோஷ்டிகளையும் கலைக்க வேண்டியதாயிற்று.

உட்கட்சிச் சண்டைகள் பகிரங்க தெருச் சண்டையாக பாரதிய ஜனதாவில் முற்றிவிட்டன. இந்த லட்சணத்தில், வடமாநிலக் கட்சியாக இருந்து வரும் இவர்கள்தான் தேச ஒற்றுமையை நிலைநாட்டப் போகிறார்களாம்! வெட்கக்கேடு!

அசாம்:

## போடோக்களின் இனவெறியாட்டம்

அசாமில் கடந்த மே மாத மத்தியில் நடந்த இனக்கலவரத்தால் அம்மாநிலத்தின் வட மாவட்டங்கள் முழுவதும் சுடுகாடாக மாறும் நிலை உருவானது. நடந்து முடிந்த தேர்தலில் போடோ இன வேட்பாளர்கள் வெற்றி பெற்றதும், கோக்ராஜ்கர், போங்கை கோன் மாவட்டங்களிலுள்ள சந்தால் பழங்குடியினச் சிறுபான்மையினர் மீது போடோ இனவெறியர்கள் கட்டவிழ்த்து விட்டுள்ள காட்டுமிராண்டித்தனமான தாக்குதலில் நூற்றுக்கும் மேற்பட்ட சந்தால் இன மக்கள் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர். 70-க்கும் மேற்பட்ட சந்தால் கிராமங்கள் தீயிடப்பட்டுள்ளன. தப்பியோடிய அப்பாவி மக்களைக்கூட இனவெறியர்கள் சம்பா ஆற்றில் மூழ்கடித்துள்ளனர். 'இனத் தூய்மைப்படுத்தும்' போடோ இனவெறியர்களின் தாக்குதலுக்கு அஞ்சி ஏறத்தாழ இரு லட்சத்துக்கும் மேற்பட்ட சந்தால் மக்கள் அசாமை விட்டு வெளியேறி, மேற்கு வங்கத்துக்கு அகதிகளாக ஓடிவந்து அல்லற்படுகின்றனர். கல்கத்தாவிலிருந்து அசாம் வழியே செல்லும் தேசிய நெடுஞ்சாலை எங்கும் மரண ஓலம் எதிரொலிப்பதாகப் பத்திரிகைகள் எழுதின.

அசாமில் 17-ம் நூற்றாண்டின் இறுதியில், காலனிய ஆட்சிக் காலத்தில் இருப்புப் பாதை அமைக்க சந்தால்கள் பீகாரிலிருந்து கட்டாயமாக இழுத்துச் செல்லப்பட்டு குடியமர்த்தப்பட்டார்கள். இது தவிர தேயிலைத் தோட்டத் தொழிலுக்காகக் கொண்டுவரப்பட்ட சந்தால்கள் அசாமை வளப்படுத்தி உழைத்து பல்கிப் பெருகியுள்ளனர். போடோக்கள் தமது சுயாட்சி பிரதேசமாக்கக் கோரியுள்ள பகுதியில்தான் சந்தால்கள் வாழ்கின்றனர். சந்தால்கள் தொடர்ந்து காங்கிரசின் ஓட்டு வங்கியாக
இருந்து வருவதால், சந்தால்களுக்கும் போடோ இனத்
வருக்குமிடையே முரண்பாடு நீடித்து வந்தது. சந்தால்
களை வெளியேற்றி, அப்பகுதிகளைப் போடோ சுயாட்
சிக் கவுன்சில் பிரதேசத்துடன் இணைக்கக் கோரி
போடோக்கள் போராட்டங்களையும் நடத்தி வந்தனர்.

இந்நிலையில் நடந்து முடிந்த தேர்தலில் போடோ
வேட்பாளர்கள் வெற்றி பெற்று காங்கிரசு வேட்பாள
கள் தோல்வியடைந்ததும், போடோ போராளி இயக்கங்
கள் இவ்வெற்றியை இனவெறியாகக் கிளறிவிட்டுள்
ளன. புதிதாக ஆட்சிக்கு வந்துள்ள அசாம் கண பரிஷ
கூட்டணி அரசிடம் தமது கோரிக்கைகளை நிறைவேற்ற
நிர்பந்திக்கும் ஒரு துருப்புச் சீட்டாக இக்கலவரத்தை
கட்டவிழ்த்து விட்டுள்ளன. ஆனால் போடோக்களைத்
தேர்தலுக்காக கூட்டணி சேர்த்துக் கொண்டுள்ள கண
பரிஷத் கட்சியோ, போடோக்களுக்கு சுயாட்சி வழங்கு



போடோக்களின் இனவெறியாட்டத்தில்
சாம்பலாக்கப்பட்ட சந்தால் குடியிருப்புகள்

வதைப் பற்றியோ, தனி மாவட்டக் கவுன்சில் நிறுவுவ
தைப் பற்றியோ இதுவரை வாயே திறக்கவில்லை. மறு
புறம், கண பரிஷத் கட்சியுடன் கூட்டணி சேர்ந்துள்ள
போலிக் கம்யூனிஸ்டுகளோ அசாம் போராட்டத்தையு
ஒப்பந்தத்தையும் 'பிரிவினைவாதம்' என்று நீண்டகால
மாகவே எதிர்த்து வருகின்றனர்.

முந்தைய காங்கிரசு அரசு இத்தனை காலமும் இரா
ணுவத்தை வைத்து அடக்கி இனப் பிரச்சினையே இல்
லாதது போலவும், தீர்வு காணப்பட்டுவிட்டது போல
வும் மாய்மாலம் செய்தது. இப்போது ஆட்சிக்கு வந்
துள்ள கண பரிஷத் கூட்டணி அரசு, இராணுவத்தை
முற்றாக வெளியேற்றிப் பேச்சு வார்த்தை மூலம் தீர்வு
காணப் போவதாகச் சவடால் அடிக்கிறது. அதன் பசப்பு
வார்த்தையை நம்பி, போடோ இயக்கங்கள் திசைவிலகி
இனவெறி புதைசேற்றில் இறங்கிவிட்டன. சில கை
கூலி அமைப்புகள் மூலம் கலவரத்தைத் தூண்டிவிட்டு
புதிய ஆட்சியில் சட்டம் - ஒழுங்கு சீர் குலைந்து வ
முறை தலைவிரித்தாடுவதாக காங்கிரசு கூப்பாடு போடு
கிறது. சிறுபான்மையினரான சந்தால் பழங்குடியினரே
பகடைக் காய்களாகிப் பரிதவிக்கின்றனர்.

**அறிவிப்பு:** தவிர்க்க இயலாத காரணங்களினால் இவ்விதழில் 'தேசிய'ப் பாரம்பரியத்தின் ஊழல் வரலாறு கட்டுரைத் தொடர் இடம் பெறவில்லை. ஆசிரியர் குழு.

www.padippakam.com

# தொடரும் கொத்தடிமைத்தனம் நாகரிக உலகின் காட்டுமிராண்டித்தனம்

• ஐந்து வயதான இளஞ்சிறுமி வள்ளி வேலூருக்கு அருகிலுள்ள வாலாஜாபாத் கிராமத்தைச் சேர்ந்த வள்; படிப்பும் விளையாட்டும் இவளது கனவில்கூட வந்திருக்குமா என்பது சந்தேகமே. காரணம், தினந்தோறும் ஐந்து ரூபாய் கூலிக்கு கயிறு திரிக்கும் கொத்தடிமை அவள்; தனது தந்தைபட்ட ஆயிரம் ரூபாய் கடனை அடைக்க வேண்டிய 'கடமை'யும் இன்று அவள் தலையில். மழலை மாறாத இளஞ்சிறுமி என்றும் பாராது பதினான்கு மணி நேரம் ஓயாத வேலை வாங்கி, கொழுத்துத் திரிகிறது வள்ளியின் எஜமான ஓநாய்.

• வேலூர் நகரத்தில் கிறித்துவ மருத்துவக் கல்லூரிக்கு அருகேயுள்ள சிறிய பல சரக்கு கடையொன்றில், வடிவேல் என்ற பதினோறு வயதுச் சிறுவன் கொத்தடிமையாக வேலை பார்த்து வருகின்றான். காட்பாடிக்கு அருகே பயணச்சீட்டு இல்லாமல் பயணம் செய்த இச்சிறுவனைப் பிடித்த போலீசுக்காரன், தான் பட்ட கடனுக்காக அவனை இக்கடை உரிமையாளரிடம் விற்றுச் சென்று விட்டான். வடிவேலுவுக்குச் சம்பளம் என்று எதுவும் கிடையாது; அவன் இந்த வேலையைத்தான் செய்ய வேண்டுமென்ற வரைமுறையும் கிடையாது.

வள்ளியையும் வடிவேலுவையும் போல் தமிழ்நாடெங்கும் எத்தனை பேர் இருப்பார்கள்? ஒரு பத்தாயிரம் பேர்? இல்லை. இருபதாயிரம்? தவறு; சரி ஐம்பதாயிரம் என வைத்துக் கொள்ளலாமா? ம்..ஹூம். ''தமிழ்நாடெங்கும் பத்து இலட்சத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் கொத்தடிமைகளாகக் காலந்தள்ளுவதாகச்'' சமீபத்தில் வெளியான அறிக்கையொன்று சுட்டிக் காட்டுகிறது.

கொத்தடிமைச் சுரண்டல் பற்றிய வழக்கொன்று தொடர்பாக, சென்ற ஆண்டில் உச்சநீதி மன்றம் தமிழக அரசிடம் புள்ளி விவரங்களைக் கோரியிருந்தது. அதற்கு தமிழ்நாட்டில் அப்பொழுது ஆட்சியில் இருந்த ஜெயா அரசு, ''மாநிலத்தில் கொத்தடிமைகள் பிரச்சினை அங்கொன்றும் இங்கொன்றுமாகத்தான் நிலவி வருகிறது'' எனப் பதில் அளித்தது.

இப்பதிலால் திருப்தியுறாத உச்சநீதி மன்றம், தமிழ்நாட்டில் உண்மை நிலையினைக் கண்டறிய இருவர் கொண்ட குழுவொன்றை அமைத்தது. அக்குழுவில் உச்சநீதி மன்ற வழக்கறிஞர் முகம்மது சிராஜ் சேட் மற்றும் சென்னையைச் சேர்ந்த தன்னார்வக் குழுவான ''கிராமப்புற ஏழைகள் சங்க''த்தின் செயலர் ஃபெலிக்ஸ் சுகிர்தராஜும் இடம் பெற்றனர். இக்குழு தமிழ்நாட்டிலுள்ள 23 மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்து, கள ஆய்வு நடத்தி, பல அதிர்ச்சி தரத்தக்க உண்மைகளைத் தக்க ஆதாரங்களுடன் 300 பக்க அறிக்கையாகத் தொகுத்து, உச்சநீதி மன்றத்திடம் கொடுத்துள்ளது.

''தமிழ்நாட்டில் 10 இலட்சம் பேர் கொத்தடிமைகளாக உள்ளனர்; இவர்களுள் கிட்டத்தட்ட ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோர் ஐந்து வயதில் இருந்து பதினான்கு வயதுக்குள்ளான சிறுவர்கள்; கொத்தடிமைகளைக் கை மாற்றி விற்பது, அதற்கு இடைத்தரகனாகச் செயல்படுவது நல்ல இலாபம் தரும் தொழிலாகத் தமிழ்நாட்டில் நடந்து வருவதோடு, பிற மாநிலங்களுக்கு கொத்தடிமைகளை விற்பதிலும் இந்தியாவிலேயே தமிழகம் முதலிடம் வகித்து வருகிறது'' என ஆணித்தரமாக எடுத்துக் காட்டியுள்ளது, அவ்வறிக்கை. மேலும் மீட்பு நடவடிக்கைகள் - நிவாரண உதவி வழங்கியதில் தமிழக அரசின் மோசடித்தனங்களையும், கொத்தடிமை ஒழிப்புச் சட்டத்தை அமுல்படுத்துவதில் மாவட்ட ஆட்சியாளர்கள் காட்டிவரும் அலட்சியப் போக்கு - அதிகாரத் திமிரையும் அம்பலப்படுத்திக் காட்டியுள்ளது.

பீடி சுற்றுதல், பட்டாசு மற்றும் தீப்பெட்டி தயாரித்தல், கல் குவாரிகளில் பலர் கொத்தடிமைகளாகக் காலந்தள்ளி வருவதைப் பத்திரிகைகளின் வாயிலாக நம்முள் பலர் அறிந்திருக்கலாம். இவ்வறிக்கை இத்தொழில்கள் தவிர, ''பாய் முடைதல், செங்கற் சூளைகள், தோட்டத் தொழில், மலர் வளர்ப்பு, கயிறு திரித்தல், மீன் பிடித்தல், சாயப் பட்டறை, மரம் வெட்டுதல், உப்பளங்கள், அரிசி ஆலைகள், பட்டுப் புடவை நெசவு, இரத்தினக் கல் பட்டை தீட்டுதல், விசைத்தறி, வெள்ளிப் பூச்சு'' எனத் தமிழகத்தில் கொத்தடிமைச் சுரண்டல் கொடி கட்டிப் பறக்கும் 20 விதமான தொழில்களைப் பட்டியல் இட்டுள்ளது.

வேலூர் போன்று மக்கள் நெருக்கம் நிறைந்த நகர்ப்புறத்திலேயே கொத்தடிமைச் சுரண்டல் தங்கு தடையின்றி நடைபெற முடியுமானால், கிராமப்புறங்களிலும், ஆள் ஆரவமற்ற கல் குவாரிகளிலும், சூளைகளிலும் வேலை செய்யும் இத்தொழிலாளர்கள் எத்தகைய கொடிய நரக வேதனையை அனுபவிக்க வேண்டியிருக்கும்?

• செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள கல் குவாரிகளில் கொத்தடிமைகளாக வேலை பார்க்கும் பெண்களை, குவாரி எஜமானர்களும், கங்காணிகளும் பாலியல் பலாத்காரப்படுத்து

ஆறு வருடங்களுக்கும் மேலாக கொத்தடிமைத்தனத்தில் உழலும் சோலப்பன் - கண்ணம்மாள் தம்பதியினர்





படிப்பகம்

www.padippakam.com

வதைத் தண்டிக்கும் வகையில் அம்மிருகங்கள் மீது எந்தச் சட்டமும் பாய்ந்ததாக இதுவரை வரலாறில்லை.

• கல் குவாரி எஜமானர்கள் தங்கள் போட்டியாளர்களை ஒழிக்கும் நோக்கத்தோடு, கற்ளை வாங்க வரும் இடைத் தரகர்கள், கற்களை ஏற்றிச் செல்ல வரும் லாரி ஓட்டுனர்களைத் திருப்திபடுத்த, இப்பெண்களையே பொறிகளாக்கி விபச்சாரத்திலும் தள்ளி விடுகிறார்கள்.

• கோவை, ஈரோடு, திண்டுக்கல், மதுரை மாவட்டங்களின் விவசாயப் பகுதிகளில் தாழ்த்தப்பட்டோர்— குறிப்பாக கோவை - ஈரோடு பகுதிகளில் தெலுங்கு பேசும் சக்கிலியர்கள், கன்னடம் பேசும் மாதாரிகள் — பண்ணையடிமைகளாகச் சுரண்டப்படுவதைப் பரவலாகக் காணமுடியும். ஒரு வேளைச் சோறு, வருடத்திற்கு 1000 ரூபாய், தீபாவளி - பொங்கல் பண்டிகைகளின் பொழுது வேட்டி - துண்டு - இது தான் இவர்களுக்குக் கூலி

தாழ்த்தப்பட்ட ஆண்மகன் வயல்வெளியிலும், அவன் வீட்டுப் பெண் பண்ணை எஜமானின் வீட்டிலும், மாட்டுத் தொழுவத்திலும் இடுப்பொடிய வேலை செய்ய வேண்டும். தான் நோயுற்றால் தனக்குப் பதிலாக மற்றொருவனை அனுப்பி வைக்க வேண்டிய கட்டாயமும் இப்பண்ணையாளுக்கு உண்டு.

• கல் குவாரியில் ஏற்பட்ட வெடி விபத்தொன்றில், தியாகராசனின் கை சிதறி முடமாகிப் போனது. தியாகராசனுக்கு நட்ட ஈடு தராததோடு, மருத்துவ உதவி கூடச் செய்ய மறுத்துவிட்டான் அவரது எஜமானன்.

• அற்பமான ஐநூறு ரூபாய் கடனுக்காக, குடும்பமே கொத்தடிமைகளாய்ச் சுரண்டப்படுவதையும், கிட்டத்தட்ட ஐந்து லட்சத்துக்கும் அதிகமான தொழிலாளர்கள் பத்து வருடங்களுக்கும் மேலாக அடிமைகளாய் அல்லற்படுவதையும், பிரசவ காலங்களில் கூட பெண்களுக்கு விடுப்போ - மருத்துவ வசதியோ செய்து தராமல், உழைக்க நிர்பந்திக்கப்படுவதையும் இவ்வறிக்கைச் சுட்டிக் காட்டியுள்ளது. விவசாயம், குவாரிகள், இரத்தினம் பட்டை தீட்டுதல், பட்டு நெசவு, கைத்தறி நெசவு, செங்கல் சூளை போன்ற தொழில்களில் ஈடுபட்டுள்ள முதலாளிகள் மத்தியில் அனாதரவான விதவைப் பெண்களை கொத்தடிமைகளாக விலைக்கு வாங்கிக் கொள்ளும் போக்கு இருப்பதாக இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த உண்மைகளையெல்லாம் ஒரே வரியில் மறைத்ததை விட, கொத்தடிமை ஒழிப்புச் சட்டத்தை அமுல்படுத்துவதில் மாவட்ட ஆட்சியாளர்களும், உயர் அதிகாரிகளும் காட்டிவரும் அலட்சியப் போக்கும், அதிகாரத் திமிரும்தான் உண்மையிலேயே அதிர்ச்சியளிக்கக் கூடியவை.

இச்சட்டத்தின்படி மாவட்டந்தோறும் கண்காணிப்பு கமிட்டிகள் அமைக்க வேண்டும் என்பது விதிமுறை. ஆனால் தமிழக அரசு அதற்கான சிறு முயற்சியில்கூட இறங்கவில்லை என்ற கசப்பான உண்மை ஆய்வுக் குழுவினரின் சோதனையின் பொழுது தெரிய வந்தது. மேலும்



குவாரியில் ஏற்பட்ட வெடிவிபத்தால் கை முடமாகிப் போன தியாகராசன்

கடந்த பல ஆண்டுகளாக அரசு எவ்வித கள ஆய்விலும் ஈடுபடாமல், உச்ச நீதி மன்றத்திற்குப் பதில் அளித்துள்ள மோசடித்தனமும் அம்பலமானது.

கொத்தடிமைகள் மீட்கப்பட்டவுடன் அவர்களுக்கு உடனடியாக 500 ரூபாயும், பின்னர் ரூ. 5,750/-ம் நிவாரணமாக வழங்கப்படவேண்டும் என்பது கொத்தடிமை ஒழிப்புச் சட்டத்தில் காட்டப்பட்டுள்ள வழிமுறை. ஆனால் அதிகார வர்க்கச் சிவப்பு நாடா முறை, நிவாரணத் தொகை வழங்குவதில் ஒரு புறம் ஊழலை உருவாக்கியுள்ளது; மறுபுறம் உரிய காலத்தில் நிவாரணத் தொகை கிடைக்காததால் மீட்கப்பட்ட கொத்தடிமைகள் வாழ வேறு வழியின்றி மீண்டும் பழைய நரகத்திலேயே தஞ்சமடையும் அவலத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

• காணூர் எனுமிடத்திலுள்ள கல் குவாரிகளில் இருந்து மீட்கப்பட்ட 33 கொத்தடிமைக் குடும்பங்கள், "தங்களுக்குத் துளைபோடும் இயந்திரங்களும், மலைப் பகுதியொன்றைக் குத்தகைக்கும் கொடுத்து உதவினால், தாங்கள் ஒரு கூட்டுறவுச் சங்கமாகச் செயல்பட்டு இலாபம் ஈட்ட முடியும்" எனத் தமிழக அரசிடம் கேட்டுள்ளனர். ஆனால் அரசின் மெத்தனப் போக்கால் அக்குடும்பங்களுள் பல மீண்டும் கொத்தடிமைகளாக வாழ்ந்து வருவதை இந்த அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது.

• ஈரோடு மாவட்டம் குமாரபாளையம் பகுதியைச் சேர்ந்த கொத்தடிமைகளுள் பலர், மீட்பதற்கு அரசு கைவிரித்துவிட்ட நிலையில் தங்கள் சிறுநீரகங்களை விற்று, கொத்தடிமை நுகத்தடியிலிருந்து மீண்டுள்ளார்கள்.

• கோயம்புத்தூர் பகுதியில் கொத்தடிமையாக வாழ்ந்து வந்த கோபால் என்பவரையும், அவரது குடும்பத்தையும் 1992 முதல் காணவில்லை எனக் கூறப்படுகிறது. அதேபொழுதில் 94-ம் ஆண்டில் கோபாலுக்கு நிவாரணத் தொகை வழங்கப்பட்டதாக அரசின் கோப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பணம் அதிகாரிகளின் பைகளுக்குள் அன்றி வேறெங்கே சென்றிருக்க முடியும்? மீட்கப்பட்ட கொத்தடிமைகளுள் பலருக்கு நிவராணத் தொகை வழங்கப்பட்டதாக அதிகாரிகள் கூறுவதற்கு, "எவ்விதமான ஆதாரங்களும் இல்லை" எனத் தெரிவித்துள்ளனர் ஆய்வுக் குழுவினர்.

★ ★ ★

**மா**வட்டந்தோறும் சுற்றுப் பிரயாணம் செய்து, "கொத்தடிமைகள் உள்ளனரா?" எனக் கண்காணிப்பது, அவர்களை மீட்பது - நிவாரணம் அளிப்பது போன்ற முக்கிய பொறுப்புகள் மாவட்ட ஆட்சியாளர்களிடமும், ஆதி திராவிட நலத் துறையிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஆனால், இந்த ஆய்வுக்குழுவினர் ஆதாரங்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவர்களைச் சந்தித்த பொழுது, அவர்களுள் பலர், "இப்பிரச்சினையில் கவனங் கொடுத்து நேரத்தைப் பாழாக்குவதை விட, வேறு பல முக்கியப் பணிகள் உள்ளதாக" மனிதாபிமானமற்ற முறையில் அலட்சியத்தோடு பதில் அளித்துள்ளனர்.

இக்குழுவினர் சந்தித்த தருமபுரி மாவட்ட ஆட்சியாளர், "நுகர்வோர் பாதுகாப்பு மன்றங்களை விட, அதிகம் தொல்லை தாக்கூடியவை கொத்த



படிப்பகம்

www.padippakam.com



மீட்கப்பட்ட சிறுமிகள்: கேள்விக் குறியான எதிர்காலம்

டிமை கண்காணிப்பு கமிட்டிகள்; இப்படிப்பட்ட பிரச்சினைகளே (கொத்தடிமை) இல்லாதபொழுது, இவை போன்ற கமிட்டிகள் தேவையற்றவை; மேலும் இப்பிரச்சினை உண்மையிலேயே முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையிலான உள் விவகாரமாகும். கணவன் - மனைவிக்கு இடையே ஏற்படும் பிணக்குகளைப் போல இதனைக் கையாள வேண்டும்'' எனக் கொச்சைப்படுத்தி கருத்துக் கூறியுள்ளார்.

மதுரை மாவட்ட ஆட்சியாளர், ''யார் ஒருவன் தனது வாழ்நாள் முழுவதும் ஒரு முதலாளியின் கண்காணிப்பில் கீழ் உழைக்கிறானோ, இலக்கணச் சுத்தமான முறையில் அடிமை நிலையில் உழல்கிறானோ அவனை மட்டும்தான் கொத்தடிமையாகக் கருத முடியும்; வேலையில்லாத் திண்டாட்டம் தலைவிரித்தாடுகிற இக்காலத்தில், இந்த வேலையாவது இவர்களுக்குக் கிடைத்திருக்கிறதே என்ற அணுகுமுறையில் இப்பிரச்சினையைக் காணவேண்டும்'' என மமதையோடு, கொத்தடிமைச் சுரண்டலை நியாயப்படுத்தினார்.

சமூக நலத் துறையைச் சேர்ந்த மாவட்ட அதிகாரிகளோ, ''கை - கால்களில் விலங்கிடப்பட்டவர்களே கொத்தடிமைகள்'' என நாடக பாணியிலான விளக்கம் அளித்துள்ளனர். அதிகாரிகளின் இவ்விளக்கங்கள் அறிவிலித்தனம் நிறைந்ததா? அல்லது அயோக்கியத்தனமானதா?

இறுதியாக இவ்வறிக்கை ''இப்பிரச்சினையைத் தீர்க்கும் பொறுப்பை அதிகாரிகளின் கைகளில் ஒப்படைக்க வேண்டும்'' என்ற செக்குமாட்டுத் தனமான தீர்வைத்தான் முன் வைத்துள்ளது. வடஆற்காடு மாவட்டத்தில் எடுக்கப்பட்ட 'தீவிர' நடவடிக்கைகளை, தனது முடிவுக்கு ஆதாரமாகக் கூறியுள்ளது.

வடஆற்காடு மாவட்டத்தில் இலட்சக்கணக்கான ஆண்கள் - பெண்கள் - குழந்தைகள், குடும்பம் குடும்பமாக கொத்தடிமைதனத்தில் உழன்ற போதிலும், இதுவரை நான்கு பீடி ஏஜெண்டுகள்தான் கொத்தடிமை ஒழிப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். பீடி சுற்றும் தொழிலாளர்களுக்குக் கொடுத்த கடன் தொகையில், 25 முதல் 50 சதவீதத் தொகையை மட்டும் தள்ளுபடி செய்யச் சொல்லி பீடி அதிபதிகளிடமும், ஏஜெண்டுகளிடம் கெஞ்சிக் கூத்தாடிதான், விரல் விட்டு எண்ணக்கூடிய குழந்தைத் தொழிலாளர்களை மீட்டெடுத்துள்ளது தமிழக அரசு. தீவிர நடவடிக்கையின் இலட்சணம் இதுதான்!

விவசாயமும், சிறு தொழில்களும் தொடர்ந்து நசிவடைந்து வரும் போக்கினால், தொழிலாளர் குடும்பங்கள் கடன் வலைக்குள் சிக்குண்டு, கொத்தடிமை நுகத்தடியில் எளிதாக மாட்டிக் கொண்டு விடுகின்றன. நிவாரணத்திற்கு முறையான திட்டம், தேவையான நிதி ஒதுக்கீடு, பகுதி மக்களின் ஒத்துழைப்பு — கண்காணிப்போடு இச்சமூக அநீதியை இல்லாது ஒழித்துவிட முடியும். இதற்கு வக்கற்ற ஆட்சியாளர்களோ, ஒன்றிரண்டு தொழிலாளர்களை மீட்டெடுத்ததையே பெரிதுபடுத்தி சுயதம்பட்டம் அடித்துக் கொள்வதில்தான் முனைப்பாகத் திரிகிறார்கள். தீண்டாமை ஒழிப்பு, குழந்தை உழைப்பு தடைச் சட்டங்களைப் போலவே கொத்தடிமை ஒழிப்புச் சட்டமும் 'சுதந்திர' இந்தியாவில் கழிப்பறைக் காகிதமாகிப் போனதுதான் கைமேல் கண்ட பலன்!

• செல்வம்

## அரசு நிர்ணயித்த கூலியை விழுங்கும் அதிகாரிகள்! நைச்சியம் பேசுகிறது சி.ஐ.டி.யு!

நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் 2,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்படாமல், ''காண்டிராக்ட்'', ''சொஸைட்டி'' தொழிலாளர்களாகப் பணிபுரிந்து வருகின்றனர். இத்தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு அரசு அறிவிக்கும் குறைந்தபட்ச கூலியைத்தான் கடந்த ஐந்தாண்டுகளாக நிர்வாகம் சம்பளமாகக் கொடுத்து வருகிறது.

கடந்த மார்ச் மாதம் இந்த வருடத்திற்கான குறைந்த பட்ச கூலியை (ரூ. 61.50) தமிழ்நாடு அரசு அறிவித்தது. ஆனால், நிர்வாகமோ சட்டப்படி தர வேண்டிய கூலியைக் கூட்டிக் கொடுக்காமல், தன்னிஷ்டம் போல பழைய கூலியையே கொடுத்து வந்தது. இதனால் கொதித்துப் போன தொழிலாளர்கள், 4.5.96 அன்று கூலியை உயர்த்தக் கோரி தன்னெழுச்சியாக சாலை மறியலில் ஈடுபட்டனர். கிட்டத்தட்ட 2,000 தொழிலாளர்கள் இப்போராட்டத்தில் கலந்து கொண்டனர். இதையடுத்து 6.5.96 அன்று பிரம்மாண்டமான ஆர்ப்பாட்ட பேரணியொன்றையும் நடத்தினர்.

சி.ஐ.டி.யு., இத்தொழிலாளர்களிடம் சந்தா வசூலித்ததை தவிர, அவர்களின் உரிமைகளுக்காகப் போராடியதாக வரலாறே இல்லை. இத்தொழிலாளர்கள் தன்னெழுச்சியாகப் போராடித்தான் ஒவ்வொரு உரிமைகளையும் வென்றெடுத்தனர். இப்போராட்டத்தின் பொழுதும், சி.ஐ.டி.யு., ''750 தொழிலாளர்கள் நிரந்தரமாகப் போகும் நேரத்தில் கூலிக்காகப் போராட்டம் நடத்தினால் காரியம் கெட்டுவிடும்'' என நிர்வாகத்தின் சார்பாக நயவஞ்சகமாகத் தொழிலாளர்களை மிரட்டியது. இந்தக் குறிப்பிட்ட 750 தொழிலாளர்களிடம் இலஞ்சம் பெறும் பொறுக்கித்தனத்திலும் ஈடுபட்டு வருகிறது, சி.ஐ.டி.யு.

நெய்வேலி பகுதியில் இயங்கி வரும் தொழிலாளர் பிரச்சாரக் குழுவினர்(தொ.பி.கு) காண்டிராக்ட் - சொசைட்டி தொழிலாளர்களையும் இணைத்துக் கொண்டு, அத்தொழிலாளர்களின் கோரிக்கைகளை ஆதரித்து சுவரொட்டி இயக்கம் நடத்தினர்; அதிகாரி நரசிம்மனின் மிரட்டலைக் கண்டித்து தொ.பி.கு. சார்பில் துண்டுப் பிரசுரம் ஒன்றும் வெளியிடப்பட்டது.

தகவல்:
தொழிலாளர் பிரச்சாரக் குழு,
நெய்வேலி.



படிப்பகம்

www.padippakam.com



# இராணுவமே நடத்திய மோசடித் தேர்தல்

காஷ்மீர் மாநிலத்தில் தேர்தல் நடத்துவது என்ற பேச்சு எழுந்த போது தேர்தல் ஆணையமும் எல்லா எதிர்க் கட்சியினரும் எதிர்த்தனர். ஏனெனில் தேர்தல் நடந்தால் நேர்மையான தேர்தலாக நடக்காது என எதிர்க்கட்சிகள் நம்பியதுதான். ஆனால் சர்வதேச அளவில், காஷ்மீரில் இந்தியாவின் அப்பட்டமான ஆக்கிரமிப்புக்கு எதிராகக் குரல் எழுந்தது. தவிர 7 ஆண்டுகளுக்கு மேலாக தேர்தலையே நடத்தாமல், தொடர்ந்து கவர்னர் ஆட்சி என்ற பெயரில் முழுக்கவும் இராணுவத்தைக் குவித்து இராணுவ சர்வாதிகாரம்தான் நடக்கிறது.

சர்வதேச அளவில்; தான் ஜனநாயகவாதி எனக் காட்டிக் கொள்ள கட்டாயம் தேர்தலை நடத்தியாக வேண்டிய நிர்ப்பந்தம் காங்கிரசுக்கு. எனவே சென்ற ஆண்டிலிருந்தே உளவுத் துறையை ஏவி கைக்கூலிகளிலிருந்து ஆள் பிடிக்கும் வேலை செய்தது. இந்திய அரசுக்கு ஆதரவாகக் கைக்கூலிகளிலிருந்து இக்வான்-உல்-முஸ்லிமூன், ஜே.கே. இக்வான் என சுமார் 8 குழுக்களை உருவாக்கியது. காஷ்மீரில் அமைதியை நிலைநாட்டப் போராளிகளுடன் பேச்சு வார்த்தை என இந்தத் துரோகக் கும்பல்களுடன் நாடகமாடியது, மைய அரசு. எதிர்பார்த்தது போலவே எதிர்க் கட்சியினரும் தமது பங்குக்கு நாடகத்தை நடத்த உதவினர். இப்படியாக தேர்தலை நடத்த முடிவு எடுத்தனர்.

காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமைக்குப் போராடி வரும் ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணியினரும் வேறு சில போராளி குழுக்களும் தேர்தலைப் புறக்கணிக்க அழைப்பு விடுத்தனர். பெரும்பான்மை மக்களும் இவர்களுக்கு ஆதரவாக உள்ளனர். இதைக் கண்டு பீதியடைந்த இந்திய அரசு, நயவஞ்சகமான முறையில் ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணியின் முக்கிய தலைவர்களைப் படுகொலை செய்தது. ஆனாலும் தேர்தலுக்கு ஆதரவாக மக்களின் மனப்போக்கில் மாற்றத்தை உருவாக்க முடியவில்லை. அதனாலேயே தேசிய மாநாட்டுக் கட்சி என்ற மாநில அளவிலான ஓட்டுக் கட்சிகூடத் தேர்தலைப் புறக்கணித்தது.

ஜம்மு - காஷ்மீர் மாநில அரசு ஊழியர்கள் யாரும் தேர்தல் வேலைகளில் பங்கேற்க மாட்டோம் என உறுதியாக அறிவித்து விட்டனர். மேலும் ஒருபுறம் அரசு பயங்கரவாதம், மறுபுறம் பல்வேறு குழுக்களின் நிர்ப்பந்தம் காரணமாக காஷ்மீர் மாநிலத்திலுள்ள அனைத்து நாளேடுகளும் தங்களின் பதிப்பை வெளியிடுவதை ஏப்ரல் மாதத்திலிருந்தே நிறுத்திவிட்டன. தேர்தல் முடியும் வரை நாளேடுகள் அச்சிடப்படவேயில்லை. மக்களுக்கு யார் தேர்தலில் நிற்கிறார்கள் என்பது கூடத் தெரியாமல் போனது. இதுதான் உண்மை. பல வாக்குச் சாவடிகளிலும் மிரட்டிக் கொண்டுவரப்பட்ட பெரும்பாலான வாக்காளர்கள் தேசிய மாநாட்டுக் கட்சியின் சின்னமான 'கலப்பை' சின்னத்தைத் தேடிக் கொண்டிருந்ததைக் காண முடிந்தது.

மாநில அதிகாரிகள் 15-லிருந்து 20 சதவீதம் வரை அதிகபட்சம் வாக்குப் பதிவாகும் என்ற அடிப்படையில் தான் வேலை செய்தனர். சுமார் 8 லட்சம் இராணுவத் துருப்புகளை இறக்கி விட்டுள்ளதை அறிந்த காங்கிரசு, பா.ஜ.க. மற்றும் ஜனதா தள கட்சியினர் 25 சதவீதம் வரை ஓட்டுப் பதிவாகும் என நம்பினர்.

இவர்களின் நம்பிக்கை, எதிர்பார்ப்புகளை மீறி ஸ்ரீநகர் தொகுதியில் 37 சதவீதமும், அனந்த்நாக், பாரமுல்லா தொகுதிகளில் 49 சதவீதமும், உதம்பூரில் 50 சதவீதத்திற்கு மேலும் வாக்குகள் பதிவானது. இதே தொகுதிகளில் '89 தேர்தலில் 5 சதவீதம், 8 சதவீதம் என்றுதான் வாக்குகள் பதிவாயின.

ஆனால் தேர்தல் எப்படி நடத்தப்பட்டது தெரியுமா? நாடு முழுவதும் உள்ள 534 நாடாளுமன்றத் தொகுதிகளுக்கு மூன்று கட்டமாக தேர்தல் நடந்ததைப் போல, காஷ்மீர் மாநிலத்திலுள்ள ஆறு தொகுதிகளுக்கும் மூன்று கட்டமாக தேர்தல் நடந்தது. போராளிகள் மிகுந்துள்ள அனந்த்நாக், பாரமுல்லா தொகுதிகளுக்கு மே 23-லும், ஸ்ரீநகர், உதம்பூர் தொகுதிகளுக்கு மே 30 தேதியிலும் இரண்டு கட்டமாக தேர்தல் நடந்தது. முன்னதாக ஜம்மு, லடாக் தொகுதிகளில் மே 7-ம் தேதி தேர்தல் நடத்தப்பட்டது.

பல்வேறு இராணுவப் பிரிவுகள் மூலம் சுமார் 8 லட்சம் துருப்புகளை நிறுத்தியிருந்ததாக குக்கா பேரி என்ற இந்திய அரசின் கைக்கூலி பேட்டியளித்துள்ளார். மொத்த வாக்காளர்கள் எண்ணிக்கை சுமார் 44 லட்சம். அதிகபட்சம் 2 தொகுதிகளில் சுமார் 15 லட்சம் வாக்காளர்கள்தான் இருப்பார்கள். இதற்கு 8 லட்சம் இராணுவத் துருப்புகள் என்றால் நிலமை எப்படி இருக்கும் என சற்று கற்பனை செய்து பாருங்கள். சுமார் 2 பேருக்கு ஒரு இராணுவ வீரர் என இவர்கள் அனைவரும் நவீன ஆயுதங்களுடன் வீடுவீடாக ஏறி, மக்களை மிரட்டி துப்பாக்கி முனைகளில் வாக்குச் சாவடிக்கு இழுத்துச் செல்வதில் சிரமமில்லையே? இப்படித்தான் இம்மாநிலத்தில் தேர்தல் நாடகம் நடந்து முடிந்தது.

இராணுவம் தவிர தற்போது இந்திய அரசின் கைக்கூலிகளாக உள்ள இக்வான் - உல் - முஸ்லிமூன், ஜே.கே. இக்வான், முஸ்லீம் முஜாகிதீன் எனப் பல அமைப்புகள் தேர்தலில் நின்றன. ஒவ்வொன்றிலும் ஆயி

ஸ்ரீ நகர் - லால் சௌக்கில் தேர்தலை எதிர்க்கும் ஆர்ப்பாட்டக்காரர்களைத் துரத்தும் எல்லை பாதுகாப்பு படையினர்





படிப்பகம்

www.padippakam.com

ரத்துக்கும் மேற்பட்டவர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்கள் அனைவருமே நவீன தானியங்கித் துப்பாக்கிகள், 'வாக்கி - டாக்கிகள்' சகிதமாகப் பிரச்சாரக் களத்தில் குதித்தனர். இவர்களும் ஆயுதங்களுடன் வாகனங்களில் ஏறி, ஒலி பெருக்கி மூலம் மக்களை மிரட்டி ஓட்டுப் போட வைத்துள்ளனர். இதைத்தான் சுதந்திரமான, நியாயமான தேர்தல் என முழங்கின இந்திய அரசின் ஊதுகுழல்கள்.

• இந்திய அரசின் கைக்கூலிகள் நவீன ஆயுதங்களுடன் தேர்தலில் குதித்திருப்பதை எல்லா கட்சிகளும் - குறிப்பாக காங்கிரசும் - கடுமையாக எதிர்த்தன. முன்னாள் அமைச்சர் குலாம் நபி ஆசாத் காங்கிரசு ஊழியர்கள் கூட்டத்தைக் கூட்டிய போது கைக்கூலிகளின் தொல்லைகளால் பிரச்சாரமே செய்ய முடியவில்லை என முறையிட்டுள்ளனர்.

• அனந்த் நாக் நகருக்கு வெளியே டயல்காம் கிராம வாக்குச் சாவடியில் காலை 8.30 மணிக்கு சுமார் 300 பேர் நின்றிருந்தனர். தமது கிராமத்தில் முகாமிட்டுள்ள 'ராஷ்ட்ரிய ரைபில்ஸ்' என்ற சிறப்பு இராணுவப் படைப் பிரிவின் மிரட்டலால் மட்டுமே தாங்கள் ஓட்டுப் போட வந்ததாகக் கூறினர்.

அவர்களிடம் தனித்தனியே பேட்டி கண்டபோது அவர்கள் கூறியது: ராஷ்ட்ரிய ரைபில்ஸ் பிரிவின் மேஜர், ''எல்லோரும் கட்டாயம் ஓட்டுப் போடப் போகவேண்டும்'' என மசூதியிலுள்ள ஒலி பெருக்க மூலம் அறிவிக்கச் சொல்லி முல்லாவிற்கு உத்தரவிட்டுள்ளார். பிறகு இராணுவ வீரர்கள் வீடுவீடாகப் புகுந்து ஓட்டுப் போடவில்லை என்றால், அடிப்போம் என மிரட்டியுள்ளனர். அனந்த் நாக், பாரமுல்லா, ஸ்ரீநகர், உதம்பூர் நான்கு தொகுதிகளிலும் இதே நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளது.

• டயல்காம் கிராமத்திலிருந்து சில கிலோ மீட்டர் தூரத்திலுள்ள புனதயாள்கம் பகுதியிலும் இதே நிலைமை தான். அங்கு பாதுகாவலுக்கிருந்த ஒரு ஜம்மு-காஷ்மீர் போலீசு அதிகாரி, ''மக்கள் நிர்பந்தத்தின் பேரில் ஓட்டுப் போட வந்துள்ளனர்'' என்பதை ஒப்புக் கொண்டார்.

• அனந்த்நாக் நகரில் பாம்போர் பகுதியில் வாக்குச் சாவடி எண் 23-ல் காலை 7.30 மணிக்குச் சென்ற போது குலாம் முகம்மது மிர் என்ற குங்குமப் பூ பயிரிடும் விவசாயி கூறியது: ''இந்தத் தேர்தல் என்னைப் பொருத்தவரை அர்த்தமற்றது. நான் ஏன் ஓட்டுப் போடுகிறேன் என்றால் என்னைச் சுற்றி மூன்று பக்கமும் துப்பாக்கிகள் குறி வைக்கின்றன. அதுவும் குக்கா பேரி என்ற கைக்கூலியின் துப்பாக்கிக்கு மிகவும் பயந்துள்ளோம்.''

40 வயதான மிர்ரின் மனைவி பாலவி படிப்பறிவற்றவர். ஓட்டுப் போட்டு வெளியே வந்தவர், அங்குள்ள மத்திய சேமப் படை (சி.பி.ஆர்.எஃப்) வீரர்களைச் சுட்டிக் காட்டி, மிகவும் பயந்த குரலில் ''நாங்கள் ஓட்டுப் போடவில்லையெனில், இவர்கள் எங்களைக் கொன்று விடுவார்கள்'' என்றார்.

மேலும் ''எங்கள் ஓட்டுக்களைப் பெற்று இங்கு அமைதியைக் கொண்டு வந்துவிடலாம் என அரசாங்கம் நினைக்கலாம். ஆனால் நாங்கள் கேட்பது எங்களது சுதந்திரம் ஒன்றைத் தான்'' என்று கூறினார். அவருடனிருந்த பெண்களும் இதே கருத்தை எதிரொலித்தனர்.



சோபூரில் தேர்தலை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்யும் சிறுவர்கள்

• அனந்த்நாக் நகரின் 46-வது வாக்குச் சாவடியில் ஜே.கே. இக்வான் என்ற கைக்கூலி அமைப்பை ஆதரிக்கும் அப்துல் ரஷீத் மிஸ்கர் என்ற சுயேச்சை வேட்பாளரின் ஏஜெண்ட் முஸ்டாக் அகமது, ஓட்டுப் போட மக்களை மிரட்டி அழைத்து வந்ததை ஒத்துக் கொண்டார். ''இங்கு பலப் பிரயோகம் செய்யவில்லை எனில் தேர்தல் நடக்காது'' என அதை நியாயப் படுத்தினார்.

• பாரமுல்லா நகரில் வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாதவர்களைக் கூட ஆடுமாடுகளைப் போல் இராணுவத்தினர் வாக்குச் சாவடிகளுக்கு இழுத்து வந்து சுட்டு விரலில் மை வைத்தனர். இது ஏன் எனக் கேட்ட போது, பின்னால் வரும் இராணுவத்தினர் தொல்லைப்படுத்தமாட்டார்கள் என்று கூறியுள்ளனர்.

பட்டான் மற்றும் டெலினா பகுதி மக்களின் நிலைமையும் இது தான்.

• சோபோர் பகுதி மிகப் பதட்டம் நிறைந்த பகுதிகளில் ஒன்று. இங்கும் 'ராஷ்ட்ரிய ரைபில்ஸ்' என்ற சிறப்பு இராணுவப் பிரிவின் அதீத மிரட்டல், அடக்குமறைகளைப் பார்க்க முடிந்தது.

• எல்லைப் பாதுகாப்புப் படையும் இக்வான் உல் முஸ்லிமூன் என்ற சரணடைந்த போராளி அமைப்பும் சேர்ந்து ஸ்ரீநகரில் மக்களைத் துப்பாக்கி முனையில் மிரட்டி, கட்டாயப்படுத்தி வாக்குச் சாவடிகளுக்கு இழுத்து வந்துள்ளனர்.

வாக்குச் சாவடிக்கு வெளியே மக்கள் தங்களின் விருப்பமின்றி கட்டாயத்தின் பேரில் வந்ததாகக் கூறினர்.

• ஸ்ரீநகரின் பட்மாலூ பகுதியைச் சேர்ந்த சீக்கியர்கள் பலரின் பெயர் வாக்காளர் பட்டியலில் கிடையாது. ஆனால் ஒவ்வொரு முறையும் சோதனையிட வந்த இராணுவத்தினர், இவர்கள் கூறுவதை காதில் வாங்கிக் கொள்ளாமல், ''சுட்டு விரலில் மை அடையாளம் இல்லாததைக் கூறி'' இச்சீக்கியர்களை வாக்குச் சாவடிகளுக்கு இழுத்துச் சென்றனர். இராணுவத்தால் இச்சீக்கியர்கள் நான்கு முறை வாக்குச் சாவடிகளுக்கு இழுத்து வரப்பட்டதைப் பத்திரிகையாளர்கள் கண்கூடாகப் பார்த்தனர்.

• பாரமுல்லாவில் இராணுவத்தினரின் அத்துமீறல்களைப் படம்பிடித்த கெய்சர் மிர்ஸா, டௌசீஃப் அகமது, ஜான்மோர் என்ற மூன்று பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டனர். மேலும் இது போல பல இடங்களில் நடந்தது. இது பற்றி தேர்தல் ஆணையரிடம் முறையிட்டபோது, இதைக் கேட்கவே மறுத்துவிட்டார். தேர்தல் முடிந்து பத்திரிகையாளர்களை அழைத்து, நடந்த தேர்தல் பற்றி பேச முயன்ற தேர்தல் ஆணையரை எல்லா பத்திரிகையாளர்களும் முகத்திலடித்தாற் போல் முற்றாகப் புறக்கணித்தனர்.

இத்தனை அடக்கு முறைகளையும் மீறி பாராமுல்லா மாவட்டத்திலுள்ள சங்ரமா, சோபோர், சிக்லொரா, ராஜ்காட், குன்வர், வார்பொரா, டோபிவான், ஹாஜன் மற்றும் பட்காம் மாவட்டத்திலுள்ள ஓம்பெரா எனப் பல இடங்களில் மக்கள் பெருமளவில் திரண்டு தேர்தலைப் புறக்கணித்து ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளனர்.

○ கதிரவன்



படிப்பகம்

www.padippakam.com

# கொக்கு தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிக்க முயலும் சி.பி.எம்.

மக்கள் கலை இலக்கியக் கழகம், புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி மற்றும் விவசாயிகள் விடுதலை முன்னணி ஆகிய மூன்று அமைப்புகளும் இணைந்து, "திடீர்ப் பணக்கார அரசியல் ரௌடிகளுக்கெதிரான இயக்கம்" ஒன்றைக் கடந்த சில மாதங்களாக நடத்தி வருகின்றனர்.

இந்த இயக்கம் குறித்து, சி.பி.எம். கட்சி நடத்தும் "மார்க்சிஸ்ட்" என்ற தத்துவ மாத இதழுக்கு, "திடீர்ப் பணக்கார அரசியல் ரவுடிகளை ஒழித்துக் கட்டுவோம். நாட்டை மீண்டும் காலனியாக்கும் சதியை முறியடிப்போம். தேர்தல் பாதையைப் புறக்கணிப்போம் என்று நக்சலைட்டுகள் நோட்டீஸ் வெளியிட்டுள்ளார்கள். இதில் எது சரியானது? எது தவறு?" என்று கேட்டு ஒரு வாசகர், எழுதியுள்ளார். அதற்கு அக்கட்சியின் சித்தாந்த செக்குமாடு திரு. பி.ஆர். பரமேஸ்வரன் தமக்கே உரித்தான முறையில் பதிலளித்துள்ளார்.

இங்கே "சித்தாந்த செக்குமாடு" என்று நாம் சொல்வது அவரைத் திட்டுவதற்காக அல்ல. எந்தவொரு பிரச்சினையானாலும் எல்லாவற்றிற்கும் சமுதாய, பொருளாதார, வர்க்க அடிப்படை என்று கொச்சையாகவும் நேரடியாகவும் காரணம் கற்பிக்கும் விளக்கவுரையைச் சூத்திரமாக ஓதிக் கொண்டிருப்பதே அவரது ஆய்வு முறையாக இருப்பதால்தான் அவ்வாறு கூறுகிறோம். இறுதி ஆய்வில் எல்லா விவகாரங்களுக்கும் சமுதாய, பொருளாதார, வர்க்கச் சுரண்டல் அடிப்படையாக இருப்பினும் அரசியல், பண்பாடு, மதம் மற்றும் வரலாற்றுக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டுள்ள சில விவகாரங்களும் உண்டு. அதேபோல எல்லா விவகாரங்களுக்கும் சமுதாய, பொருளாதார, வர்க்க ரீதியில் மட்டும் தீர்வு கண்டுவிடவும் முடியாது. அரசியல், பண்பாடு, இராணுவ ரீதியில் அணுகித் தீர்வு காண வேண்டிய சில விவகாரங்களும் உண்டு.

ஆனால், தொழிற்சங்கப் பொருளாதாரச் சகதியில் மூழ்கிப் போன சித்தாந்த செக்குமாடான பி.ஆர்.பி. போன்ற போலிக் கம்யூனிஸ்டுகள் இந்த உண்மையை மூடி மறைக்கின்றனர். எனவே தான், புரட்சியாளர்கள் நடத்தும் "திடீர்ப் பணக்கார அரசியல் ரௌடிகளுக்கு எதிராக இயக்கம்" பற்றிய கேள்வி எழுப்பியவுடன், ஏதோ முற்றும் அறிந்த தீர்க்கமான ஆய்வாளரைப் போல நடித்துப் பின்வரும் எதிர்க்கேள்விகளை எழுப்புகிறார். "இவர்கள் சுட்டிக் காட்டுவது உட்பட இன்றைய சமுதாயச் சீரழிவின் அடிப்படைக் காரணம் என்ன? சமுதாயத்தின் பெரும்பான்மையோரான ஏழை மக்களுக்கு, அடித்தட்டு மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளின் மூலகாரணம் என்ன? இன்றைய சமுதாயத்தின் வர்க்கத்தன்மை என்ன? அரசு அதிகார அமைப்பின் வர்க்க அடிப்படை என்ன?" ('மார்க்சிஸ்ட்' மே '96).

இதுதான் சங்கரன் நம்பூதிரியிடம் போலிக் கம்யூனிஸ்டுகள் கற்றுக் கொண்ட வித்தை. குறிப்பான ஒரு பிரச்சினையின் மீது எழுப்பப்படும் கேள்விக்கு சாத்தியமான அளவு பொதுவான விளக்கங்களுக்குள் மூழ்கடித்து நழுவிக் கொள்வது. இதுதவிர எழுப்பப்படும் பிரச்சினை, கேள்விகளுக்குத் தாமே சொந்த வியாக்கியானம் கொடுத்து, அந்த நிலையிலேயே திரித்துப் புரட்டி வேறொரு பதிலைச் சொல்லி நழுவிக் கொள்வது.

எழுப்பப்படும் பிரச்சினை "திடீர்ப் பணக்கார அரசியல் ரௌடிகள்" பற்றியது தானே தவிர, பொதுவில் சமுதாயத்தில் ரௌடிகள், சமூக விரோதிகள், கிரிமினல்கள் பற்றியது அல்ல. அதாவது ஏற்கனவே சமூகத்திலுள்ள கிரிமினல்கள் அரசியல் தலைவர்களாகி சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் அமைச்சர்களாகவும் மாறிவிடுவது; ஏற்கனவே அரசியல் பிரமுகர்களாகவும் தலைவர்களாகவும், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்களாக உள்ள அரசியல்வாதிகள் கிரிமினல்களாக மாறிவிடுவது; இந்த இரண்டு பிரிவினரும் கூட்டுச் சேர்ந்து நாட்டின் அரசியலே கிரிமினல்மயமாவது; இதன் விளைவாக பரந்துபட்ட மக்களை அடக்கி, ஒடுக்கும் குற்றக் கும்பல்களின் கரங்களில் அரசியல் அதிகாரம் சிக்கிவிடுவது; இது ஒரு பாசிச சர்வாதிகாரத்துக்கான சமூக, அரசியல் அடித்தளமாக அமைவது — இந்தப் போக்கை எதிர்த்து, நமது பாசிச எதிர்ப்பு செயல் தந்திரத்தின் ஒரு பகுதியாக நடத்தப்படுவதுதான் "திடீர்ப் பணக்கார அரசியல் ரௌடிகளுக்கு எதிரான இயக்கம்."

> ரௌடிகள், குண்டர்களால் எழும் பிரச்சினைகளுக்கு சி.பி.எம். தலைமை கூறும் தீர்வு என்ன? "பொறுமையாக சகித்துக் கொள்ளுங்கள்! அவர்களுக்கு அடிப் பணிந்து போய்விடுங்கள்! தனியாகவோ, அமைப்பாகவோ திரண்டு எதிர்க்காதீர்கள்! நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் தேர்தல் வேலைகளைக் கவனிப்பது தான்!" என்று உபதேசிக்கிறார்கள்.

இப்படிப்பட்ட அரசியல் கிரிமினல்கள், கிரிமினல் அரசியல்வாதிகளுக்கு எதிரான நமது இயக்கத்தின் சரி, தவறுகள் மீதான விமர்சனங்களை வைப்பதற்குப் பதில் பொதுவில் சமுதாயத்தில் ரௌடிகள், அடியாட்கள், குண்டர்கள், சமூக விரோதிகள் உருவாவதற்கான சமுதாய, பொருளாதார, வர்க்க அடிப்படை பற்றிய பாராயணம் செய்திருக்கிறார், பரமேஸ்வரன்.

இன்னும் அதிகமாகக் குழப்புவதற்காக, மேலும் விரிவான விவரங்களுக்குள் வாசகர்களை மூழ்கடிக்கும் நோக்கோடு சமுதாயச் சீரழிவின் அடிப்படை, மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளின் மூல காரணம், சமுதாயத்தின் வர்க்கத் தன்மை, அரசு அதிகார அமைப்பின் வர்க்க அடிப்படை ஆகியவை பற்றிய ஆராய்ச்சிக் கேள்விகளை எழுப்புகிறார், பரமேஸ்வரன். நமக்கோ, வாசகருக்கோ தெரியாத் ஆராய்ச்சிக் கண்டுபிடிப்பைப் போல, "இன்றைய சமுதாயத்தின் வர்க்கச் சுரண்டலும் வர்க்க முரண்பாடுகளும், மோதல்களும்தானே சமுதாய வாழ்க்கையின் அமைதியின்மைக்கும் மோதலுக்கும் அடிப்படைக் காரணம்?" என்று கேட்கிறார்.

நிலவுடைமை மற்றும் லேவாதேவிச் சுரண்டலுக்காகவும், கிராம ஆதிக்கத்துக்காகவும் அடியாட்களை நிலப்பிரபுக்கள் அமர்த்திக் கொள்வதுதான் கிராமப்புற ரவுடித்தனத்தின் வர்க்க அடிப்படை; நகர்ப்புறங்களில் பெரும் வர்த்தகர்களும் தொழில் அதிபர்களும் தமது சுரண்டல், ஒடுக்குமுறை தேவைக்காக அடியாட்களை உருவாக்குகிறார்கள்; நிலப்பிரபுக்களுக்கிடையேயான முரண்பாடுகளி

....தொடர்ச்சி 22-ம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

# புதிய பொருளாதாரக் கொள்கை படுதோல்வி

# 4

கூட்டுப் பங்குத் தொழில் கழகங்களும் பங்குச் சந்தையும் எப்போது வந்ததோ, அப்போதே பங்குச் சந்தை மோசடிகளும் பங்குச் சந்தை சூதாட்டமும் - ஊக வணிகமும் - வந்துவிட்டன. இவற்றைக் கட்டுப்படுத்த பல சட்டங்களும் பங்கு பத்திர பரிமாற்ற வாரியம் (''செபி'') போன்ற அமைப்புகளும் நமது நாட்டில் உள்ளன. ஆனால் நரசிம்மராவ் - மன்மோகன் சிங் கும்பல் தாராளமயமாக்கும் கொள்கையை அமுலாக்கிய பிறகு, அத்தகைய அமைப்புகளின் கண்களில் மண்ணைத் தூவி அல்லது அதன் அதிகாரிகளை விலைக்கு வாங்கி - கூட்டுச் சேர்ந்து, சட்டங்கள் விதிமுறைகளை மீறி, பங்குச் சந்தை தில்லுமுல்லுகள் செய்வது பன்மடங்கு பெருகி விட்டது.

நாட்டிலுள்ள பெரிய தரகு முதலாளிகளான அம்பானி போன்றவர்கள் பல போலியான, பினாமி பங்கு பத்திர நிர்வாகக் கம்பெனிகளைத் தாமே ஆரம்பித்து நடத்துகின்றனர். இந்த நிறுவனங்கள் மூலம் தாமே பங்குச் சந்தையில் புகுந்து தமது நிறுவனங்களின் பங்குகளின் மதிப்பை செயற்கையாக ஏற்றி விடுகின்றனர். இதன் மூலம் சாதாரண முதலீட்டாளர்களிடம் இருந்து ஏராளமாகக் கொள்ளையடித்து விடுகிறார்கள்.

உதாரணமாக ''ஜாய் ஸ்டாக் புரோக்கர்ஸ்'' (ஜாய் பங்குத் தரகர்கள்) என்ற நிறுவனமும், ''பிரதிக் ஸ்டாக் விஷன்'' என்ற நிறுவனமும் ஒரு சமயம் பங்குச் சந்தை மூடப்படும் இறுதி நேரத்தில் திடீரென்று தலா ஏழு இலட்சம் மற்றும் ஐந்தரை இலட்சம் அம்பானியின் நிறுவனப் பங்குகளை வாங்கிக் குவித்தன. அந்தப் பங்குகளின் மதிப்பு திடீரென பன்மடங்கு உயர இது காரணமாக இருந்தது. இந்தியப் பங்கு பரிமாற்ற வாரியம் (''செபி'') இது பற்றி விசாரிக்க முனைந்தபோது, அந்த இரு தரகு நிறுவனங்களின் உரிமையாளர்கள் இன்னாரென்று கண்டுபிடிக்க முடியாமற் போனது. அவை இரண்டுமே அம்பானியின் பினாமி போலி நிறுவனங்கள் என்பது அப்புறம்தான் தெரிந்தது.

பங்குகள் வாங்குவது விற்பது மூலம் கொள்ளையடிப்பதற்காக மட்டுமல்ல, வேறொரு காரணத்துக்காகவும் தொழில் நிறுவனங்களே இப்படிப்பட்ட தில்லுமுல்லுகளைச் செய்கின்றன. ஏற்கனவே தொடங்கி தொழில் நடத்திவரும் முதலாளிகள் புதிய முதலீடுகளையோ, தொழில்களையோ துவங்குவதற்கு முன்பாக இப்படிப்பட்ட தில்லுமுல்லுகள் செய்கின்றனர். இதன்மூலம் அந்த முதலாளிகளின் நிறுவனங்களின் பங்குகளுக்கு கிராக்கி இருப்பதாக, அவற்றின் மதிப்பு உயர்ந்தது என்று காட்டி, புதிய பங்குகளின் முகமதிப்பை உயர்த்தி வெளியிட்டு ஒரு பெரிய வசூல் வேட்டை நடத்துகின்றனர்.



புதிய பங்குகள் பொதுச் சந்தையில் வெளியானபின் பழைய பங்குகள் குறைந்த விலைக்கு விற்கின்றனர். எம்.எஸ்.ஷூஸ், கணேஷ் பென்ஸோ, ஃபெம்னார் மினரல்ஸ் போன்ற பல நிறுவனங்களும் இப்படிச் செய்துள்ளன.

பினாமி தரகு நிறுவனங்கள் மூலம் பங்குகளை வாங்கி விற்கும் நிறுவனங்கள் உரிய காலத்தில் பங்குச் சந்தையில் ரொக்கம் செலுத்தத் தவறிவிடுவதால், அடிக்கடி நெருக்கடிகள் ஏற்படுகின்றன. ஆர்.எஸ். ஜாவேரி மற்றும் சரீன் அண்ட் கோ ஆகிய இரண்டு தரகு நிறுவனங்களும் பவன் சச்தேவ் என்ற எம்.எஸ்.ஷூஸ் முதலாளியுடன் கூட்டுச் சேர்ந்து அந்நிறுவனத்தின் பங்கு மதிப்பை பன்மடங்கு ஏற்றிவிட்டன. ஆனால் பங்குச் சந்தையில் அதற்குரிய தொகையைச் செலுத்த முடியாமல் போயின. இதனால் பம்பாய் பங்குச் சந்தையே சில நாட்கள் மூடும்படி நேர்ந்தது. இதே நிறுவனம் தனது பங்குகளின் மதிப்பு பற்றி பொய்யான விவரங்களை விளம்பரப்படுத்தியது. அந்த விளம்பரங்களை நிறுத்தும்படி ''செபி'' உத்தரவிட்டும் அப்படிச் செய்யவில்லை. இந்தக் குற்றங்களில் அரசுடமை வங்கியின் பங்கு பத்திர நிர்வாகப் பிரிவுகளே உடந்தையாக இருந்துள்ளன.

தரகு முதலாளி அம்பானி தனது பினாமி பங்கு நிர்வாகக் கம்பெனிகள் மூலம் திடீரென்று ஒரே எண்ணுடைய போலிப் பங்கு பத்திரங்களை ஏராளமாகப் புழக்கத்தில் விட்டு மோசடிகளும் செய்துள்ளார். விவகாரம் வெளியே வந்து நாறியபோது ''சில இலட்சம் பங்கு பத்திரங்கள் தொலைந்து போய்விட்டன; அந்த அசலுக்கு நகல் பத்திரங்கள் வெளியிடப்பட்டன'' என்று காரணம் கூறியது கம்பெனி. இதற்கு முன்பு ஒரு சில கிரிமினல் கும்பல்கள் தாம் சட்டபூர்வ நிறுவனங்களின் கள்ளப்பங்குகளை அச்சிட்டு புழக்கத்தில்விட்டு மோசடி செய்தனர். இப்போது, பெரும் தரகு முதலாளிகளே இப்படிச் செய்யத் துணிந்துவிட்டனர்.

அம்பானி விவகாரத்தில் இது அம்பலமாகவே திடீரென்று பம்பாய் பங்குச் சந்தையில் இருந்தே விலகிக் கொள்வதாக அவர் அறிவித்தார். இதனால் பம்பாய் பங்குச் சந்தையே நெருக்கடிக்குள்ளாகி சில நாட்கள் மூடிவிடும் நிலை ஏற்பட்டது. இறுதியில் அம்பானிக்கு விட்டுக் கொடுத்து சமரசம் செய்து கொண்டனர் பங்குச் சந்தை அதிகாரிகள்.

ஆனால் போலிப் பங்கு பத்திரங்களைப் புழக்கத்தில் விடுவது பல கம்பெனிகளும் வழக்கமாக செய்து வருவதுதான் என்று அம்பானி கும்பல் நியாயப்படுத்தியது; அதைத் தொடர்ந்து, டாட்டா, பிர்லா போன்ற பெரும் தொழில் நிறுவனங்களான 'டிஸ்கோ', 'கிரேசிம் இண்டஸ்ட்ரீஸ்', 'டெல்கோ' மட்டுமல்ல, இந்திய அரசு வங்கிகள், தொழில் நிறுவனங்களும் இப்படிச் செய்வது அம்பலமாகி விசாரணைக்குள்ளாகி இருக்கின்றன.

பங்குச்சந்தை சூதாட்டமும், ஊக வணிகமும் - மோசடிகளும் அதீதமாக வளர்ந்து விட்ட நிலையில் நீண்ட காலமாக நிலவிவந்த ''பத்லா'' என்ற ஒத்திப்போடல் முறையை ''செபி'' தடை செய்தது. ஆனால் பங்குச் சந்தை தரகர்களும் நிர்வாகிகளும் முதலாளிகளும்



படிப்பகம்

www.padippakam.com




கொடுத்த நிர்ப்பந்தம் காரணமாக, ''செபி'' ஒரு கமிட்டி போட்டது; அது சிபாரிசு செய்த நிபந்தனைகளுக்குட்பட்டு, மீண்டும் ''பத்லா'' முறையை அனுமதித்தது.

மிகை அளவிலான ஊக வணிகத்தின் மறுபெயர்தான் ''பத்லா'' முறையாகும். இதன்படி பிறரிடம் இருந்து பங்குகளை வாங்கும் பங்குத் தரகர்கள் அதற்குரிய தொகையை உடனடியாகத் தருவதற்குப் பதில் 15 தினங்களுக்கு ஒத்திப் போடலாம். 15 நாட்களுக்குப் பிறகு கூட பாதித் தொகையைச் செலுத்திவிட்டு, மீதியைத் தருவதற்கான காலத்தை மேலும் 15 நாட்கள் ஒத்திப் போடலாம். அதேபோல பிறரிடம் இருந்து பங்குகளை வாங்கிக் கொள்வதாக ஒப்புக்கொண்ட பின்னும், அவ்வாறு செய்யாமல் 15 தினங்கள் ஒத்திப் போடலாம்; இப்படியே 90 நாட்களுக்கு ஒத்திப்போட்டுக் கொண்டே போகலாம். அதன்பின்னும் குறிப்பிட்ட அந்தப் பங்குத் தொகுதிகளின் வியாபாரக் கணக்கு முடிந்ததாகக் கூற முடியாது. இதன் மூலம் ஒவ்வொரு தரகனும் பிறருடைய பணத்தையும் பங்குகளையும் பல கோடிக்கணக்கில் தன்னிடமே வைத்துக் கொண்டு மேலும் மேலும் ஊக வணிகத்தில் ஈடுபட்டுக் கொள்ளையடிக்க முடியும்.

பங்குச் சந்தை மோசடிகள், சூதாட்டம் - ஊக வணிகம் உட்பட பொருளாதாரக் குற்றங்கள் பல ஆண்டுகளாக நிலவிவருவனதாம் என்றாலும் புதிய பொருளாதாரக் கொள்கை இவற்றையும் தாராளமயமாக்கிவிட்டது. இதன் நேரடி விளைவு என்னவென்றால், மன்மோகன் சிங் - நரசிம்ம ராவ் கும்பல் ஆருடம் கூறியவாறு உள்நாட்டுத் தனியார் முதலீடு பெருகவில்லை. குறிப்பாக நடுத்தர, மேல்தட்டு வர்க்கத்தினர் பங்குச் சந்தையில் முதலீடு செய்வதற்கே அஞ்சும் நிலைமை ஏற்பட்டது. இந்தப் பிரிவினரது சேமிப்பு மற்றும் முதலீடு விகிதம் கடந்த ஐந்தாண்டுகளில் அதிகரிக்கவில்லை; குறைந்துவிட்டது. அதேசமயம், புதிய முதலீடுகளுக்காகவும், புழக்க நிதிக்காகவும் வேண்டி பெருமுதலாளிகளே பல பொருளாதார மோசடிகள், குறுக்கு வழிகளில் ஈடுபடுவது அதிகரித்துவிட்டது.

அவர்களுக்கு மேலும் நிதி நெருக்கடிகளை ஏற்படுத்தும் வகையில் அரசின் நிதிக் கொள்கையும் அமைந்திருந்தது. பணவீக்கத்தைக் குறைப்பதற்காக, பணப்புழக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக அரசுடைமை வங்கிகள் மூலமாகக் கடன் முடக்கம் என்ற கொள்கை கடந்த ஐந்தாண்டுகளாக அமுல்படுத்தப்படுகிறது. அதாவது பெரு முதலாளிகள் புழக்க நிதிக்காக அரசுடைமை வங்கிகளிடம் இருந்து கடன் பெற்று வந்தனர். அப்படி எவ்வளவு தொகை கடன் தரலாம் என்பதை மத்திய ரிசர்வ் வங்கியே கட்டுப்படுத்துகிறது. புதிய பொருளாதாரக் கொள்கை அமலாக்கத் தொடங்கிய பிறகு அந்த வசதி முடக்கி வைக்கப்பட்டது, அல்லது கடும் வரம்புகள் போடப்பட்டன. பெருமுதலாளிகள் அதற்கான தேவையைத் தனியார் முதலீட்டாளர்களிடம் இருந்து திரட்டிக் கொள்வார்கள் என்று அனுமானிக்கப்பட்டிருந்தது.

ஆனால் தனியார் முதலீடு அந்த அளவு இல்லை. இதனால் கடன் முடக்கத்தை முற்றாக நீக்கும்படி பெருமுதலாளிகள் தொடர்ந்து அரசிடம் நிர்ப்பந்தித்து வருகின்றனர். அரசோ, தவணை முறையில் மாறி மாறி கடன் முடக்கத்தைத் தளர்த்தியும், மேலும் இறுக்கமாக்கியும் பணப் புழக்கத்தைக் கட்டுப்படுத்தவே முயலுகிறது. இதனால் தொழில் முன்னேற்றம் மந்தமாகி விட்டது, நெருக்கடியைச் சந்தித்து வருகிறது என்று பெருமுதலாளிகளும் அவர்களது ஊதுகுழல்களான பொருளாதார, தொழில், வர்த்தகப் பத்திரிகைகளும் கூச்சல் போடுகின்றனர்.

இவ்வாறு பொருளாதாரம், அரசியல் இரண்டுமே கிரிமினல்மயமாகியுள்ளதும், அவற்றோடு கவர்ச்சிவாத தேர்தல் அரசியலும் சேர்ந்துள்ளதும் புதிய பொருளாதாரக் கொள்கையின் அமலாக்கத்தைக் கருச்சிதைவடையச் செய்துவிட்டன.

புதிய பொருளாதாரக் கொள்கை முற்றிலும் ஏகாதிபத்தியம், தரகு அதிகார முதலாளிகளுடைய நலன்களுக்கானதுதான். சாதாரண மக்களுக்கு அதனால் ஒரு நன்மையும் கிடையாது என்று முற்போக்கு, ஜனநாயகவாதிகள் எதிர்த்தனர். இதை மறுத்த நரசிம்மராவ் - மன்மோகன் சிங் கும்பல், நிறுவனங்களுக்கிடையே போட்டிகள் நிலவுவதற்கு முழுவாய்ப்பும் அளிக்கப்படுவதால் தரம் உயரும்;

## பு.மா.இ.மு. கிளை துவக்க விழா!

திருச்சி நகரில் சங்கிலியாண்டாபுரம் பகுதியில் கடந்த மே-1ந் தேதியன்று புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியின புதிய கிளையொன்று துவங்கப்பட்டது. அன்று கிளை துவக்க விழாவும் மே தினப் பொதுக்கூட்டமும் இணைத்து நடத்தப்பட்டது. இப் பொதுக்கூட்டத்திற்கு முதலில் அனுமதியளித்திருந்த போலீசு, திடீரென அனுமதியை ரத்து செய்துவிட்டது. ஆனாலும் தோழர்கள் விடாப்பிடியாகப் போராடி அனுமதியைத் திரும்பப் பெற்றனர். பொதுக் கூட்டத்திற்கு பு.மா.இ.மு. தோழர். ராஜா தலைமை தாங்க, ம.க.இ.க. தோழர் காளியப்பன் மே தினச் சிறப்புரையாற்றினார். ம.க.இ.க. மையக் கலைக்குழுவினரின் புரட்சிகர கலை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

தகவல்:
பு.மா.இ.மு., திருச்சி.



படிப்பகம்

www.padippakam.com

விலைவாசி குறையும்; தொழில்கள் பெருகி வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும்; கல்வி, மருத்துவம் போன்ற பொது நலப் பணிகளைத் தொழில் நிறுவனங்களே கவனித்துக் கொள்ளும் என்றெல்லாம் வாதிட்டது. ஆனால் நடந்தது என்ன?

ஏகாதிபத்திய நாடுகளிலும், இந்தியாவிலும் முக்கியமான பல தொழில் துறைகள் ஏகபோக நிலையை எட்டிவிட்டுள்ளன. இதனால் தொழில் நிறுவனங்களுக்கிடையே போட்டி என்பதும் பொருட்களின் தரம் உயர்வதும் விலைவாசி குறைவதும் வெறும் கதையாகிப் போயின. ரூபாயின் மதிப்பு வீழ்ச்சியோடு விலைவாசியும் பன்மடங்கு ஏறிவிட்டது. ஏகபோக நிறுவனங்களின் பழைய உற்பத்திப் பொருட்களுக்கே பன்னாட்டு நிறுவனங்கள் முத்திரைப் பெயர்கள் வைத்து விற்பது தான் வந்தது. இறக்குமதியாகும் பொருட்களும் (உதாரணமாக, செய்தித்தாள், பெட்ரோலியம் பிற) அரசின் கொள்ளைக்காக ஏராளமான வரி விதிப்பு, அதீத நிர்ணய விலை காரணமாகவும், உலகச் சந்தையில் ரூபாயின் மதிப்பு வீழச்சியின் காரணமாக மிகையான விலைக்கே கிடைக்கிறது.

மருத்துவம், ஒரு பொது நலப் பணி என்பதற்கு மாறாக, இன்னுமொரு கூட்டுப்பங்கு தொழிலாக்கப்பட்டு, நட்சத்திர விடுதிகளைப் போன்று தொழிலதிபர்களால் கொள்ளையிடப்படுகிறது. அரசியலும் பொருளாதாரமும் கிரிமினல்மயமானதைத் தொடர்ந்து கல்வி நிறுவனங்கள், குறிப்பாக உயர்கல்வி நிலையங்கள் யாவும் திடீர்ப் பணக்கார அரசியல் ரௌடிகளிடம் சிக்கிவிட்டன. சுயநிதிக் கல்லூரிகள் என்கிற பெயரில் பகற்கொள்ளையடிப்பதற்கான வழியாக, சமூக விரோத அரசியல் பிரமுகர்கள் கல்வித் துறையில் தமது ஆதிக்கத்தை நிறுவிக் கொண்டனர்.

தேசங் கடந்த, பன்னாட்டுத் தொழில் கழகங்களேகூட தொழில் ஒப்பந்தங்கள் போடவும் ஆலைகளை நிறுவவும் மேலே லஞ்ச ஊழல் அரசியல்வாதிகள் முதல் கீழே உள்ளூர் குற்றக் கும்பல்கள் வரை ''கப்பம்'' கட்ட வேண்டிய நிர்பந்தம் உள்ளது. இப்படிப்பட்ட பல தடைகள் காரணமாக, நரசிம்ம ராவ் - மன்மோகன் சிங் மட்டுமல்ல அவர்களது ஏகாதிபத்திய எஜமான்கள் எதிர்பார்த்த பலன்கள் ஏற்படாமல், புதிய பொருளாதாரக் கொள்கை தோல்வியைத் தழுவி வருகிறது. (முற்றும்) • ஆர்.கே.

**♦ உர பேர ஊழல் ♦ 133 கோடி பகற் கொள்ளை**

# இந்திரா காந்திக்கு ஒரு ராஜீவ் காந்தி நரசிம்ம ராவுக்கு ஒரு பிரபாகர் ராவ்

**வங்கி - பங்குச் சந்தை ஊழல், சர்க்கரை ஊழல், ரயில்வே ஊழல் என கடந்த ஐந்தாண்டுகளில் கோடிகோடியாய்க் கொள்ளையடித்த ராவ் கும்பல், தேர்தலுக்கு முன்பாகச் சுருட்டிய ''யூரியா'' உர பேர ஊழல் விவகாரம் அண்மையில் அம்பலமாகியுள்ளது.** நரசிம்ம ராவின் மகன் பிரபாகர் ராவ், மற்றொரு மகனாகிய ராஜேஸ்வர ராவின் மைத்துனர் சஞ்சீவ ராவ், ராவ் அரசில் மத்திய உர அமைச்சராக இருந்த ராம்லக்கன் சிங் யாதவின் மகன் பிரகாஷ் சந்திர யாதவ், தேசிய உரக் கழகத்தின் (NFL) உயர் அதிகாரிகள், பாரத அரசு வங்கியின் உயரதிகாரிகள், சர்வதேச ஹவாலா - மாஃபியா பேர்வழிகள் என பெரிய கும்பலே இந்த ஊழலில் சடுபட்டுள்ளது. பாசிச ராஜீவின் போபர்ஸ் பீரங்கி பேர ஊழலில் துருப்பிடித்த பீரங்கியாவது இந்தியாவுக்கு வந்தது. ஆனால் உர பேர ஊழலில் 133 கோடி ரூபாய் கொள்ளை போனதோடு உரமும் வந்து சேராமல் போய்விட்டது.



ஊழல் மும்மூர்த்திகளில் மூலவர்: ராவ் மகன் பிரபாகர் ராவ்

இந்தியாவில் யூரியா உரத் தட்டுப்பாட்டைப் போக்க, 2 லட்சம் டன் யூரியாவை அந்நிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதென மத்திய இரசாயன மற்றும் உர அமைச்சகம் கடந்த ஆண்டில் முடிவு செய்தது. இதன்படி, 14 நிறுவனங்கள் இறக்குமதிக்கான ஒப்பந்தம் செய்து கொள்ள விண்ணப்பித்திருந்தன. சர்வதேசச் சந்தையில் ஒரு டன் யூரியாவின் விலை ஏறத்தாழ 240 டாலராக இருந்த நிலையில், துருக்கி நாட்டைச் சேர்ந்த ''கர்சான்'' என்ற நிறுவனம் 190 டாலருக்குத் தருவதாகக் கூறியது. இந்நிறுவனத்தின் சார்பில், ஐதராபாத்தைச் சேர்ந்த ''சாய் கிருஷ்ணா இம்பெக்ஸ்'' என்ற நிறுவனத்தின் தலைவரான சாம்பசிவ ராவ் தரகராகச் செயல்பட்டார்.

கடந்த ஆண்டு அக்டோபர் 31-ந் தேதியன்று உர இறக்குமதிக்கான ஒப்பந்த விண்ணப்பங்கள் அனைத்தும், தேசிய உரக் கழகத்தின் உயர்மட்ட தொழில் நுட்பக் குழுவினரால் பரிசீலிக்கப்பட்டன. இதில் துருக்கியின் கர்சான் நிறுவனம் தகுதியற்றது என்று நிராகரிக்கப்பட்டது. ஆனாலும், அந்நிறுவனம் தனது விண்ணப்பத்தில் அவசரமாக சில திருத்தங்களைச் செய்து கொடுத்ததும், குறைந்த விலையில் யூரியா விற்கும் இந்நிறுவனமே பொருத்தமானது என்று அடுத்த நாளே முடிவு செய்யப்பட்டது.

நவம்பர் 9-ந் தேதியன்று தேசிய உரக் கழகமும் கர்சான் நிறுவனமும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. ஒப்பந்தத்தின் விதிகளும், கட்டுப்பாடுகளும் இறுதியாக்கப்படும் முன்னரே நவம்பர் 2-ந் தேதியன்று மொத்தத் தொகையில் 1% தொகை (அதாவது ரூ. 13.3 கோடி) விதிமுறைகளை மீறி துருக்கி நிறுவனத்துக்கு அச்சாரமாகச் (அட்வான்சாக) செலுத்தப்பட்டது. நவம்பர் 14-ந் தேதியன்று மீதி 99% தொகையும் (அதாவது ரூ. 129.7 கோடி) தெற்கு டெல்லியின் பாரத அரசு வங்கி மூலமாக நியூயார்க்கிலுள்ள பாரத அரசு வங்கிக்கு அனுப்பப்பட்டது. இதன் மூலமாக துருக்கி நாட்டின் தலைநகரான அங்காராவிலுள்ள அமுக் வங்கிக்கு இத்தொகை அனுப்பி வைக்கப்பட்டது.

கர்சான் நிறுவனத்துக்கு தமது வங்கியில் கணக்கு ஏதுமில்லாததால், தொகையைப் பெற்றுக் கொள்ள இயலாது என்று அமுக் வங்கி இவ்வாண்டு ஜனவரியில் அறிவித்தது. இதுபற்றி இந்தியத் தரகன் சாம்பசிவ ராவிடம் பாரத அரசு வங்கி தெரிவித்ததும், அவர் சுவிஸ் நாட்டின் ஜெனிவா நகரிலுள்ள இந்தோ - சூயஸ் வங்கிக்கு



படிப்பகம்

www.padippakam.com

தொகையை அனுப்பக் கோரினார். ஆனால் அந்த வங்கியும் கர்சான் நிறுவனத்துக்கு தமது வங்கியில் கணக்கு ஏதுமில்லை என்று தொகையை ஏற்க மறுத்துவிட்டது. பின்னர், பிப்ரவரியில் இந்தப் பணம் ஜெனிவாவிலுள்ள பிக்டெட் வங்கிக்கு அனுப்பப்பட்டது. கர்சான் நிறுவனத்தின் பெயரில் அல்லாமல் ஒரு பினாமி வங்கிக் கணக்கு எண்ணில் தொகை செலுத்தப்பட்டது. பிக்டெட் வங்கி இதை ஏற்றுக் கொண்டது.

தொகை முழுவதும் செலுத்தப்பட்ட பின்னரும் மார்ச் இறுதிவரை இந்தியாவுக்கு யூரியா வந்து சேரவில்லை. இதுபற்றி கர்சான் நிறுவனம் மற்றும் தரகன் சாம்பசிவ ராவிடம் கேட்டபோது, ஒப்பந்த விதிமுறைச் சிக்கல்களின் காரணமாக யூரியாவை உடனடியாக அனுப்ப இயலாத நிலைமை உள்ளதாகவும், செசன்யப் போர் காரணமாக சரக்கை அனுப்புவதில் தாமதமாவதாகவும் பசப்பினார். இதனால் வங்கியில் செலுத்தப்பட்ட பணத்தை கர்சான் நிறுவனத்துக்குக் கொடுக்காமல் நிறுத்தி வைக்க இந்திய உரக் கழக அதிகாரிகள் முயற்சித்தபோது, இந்தத் தொகை முழுவதும் ஒரு மாதத்துக்கு முன்னரே எடுக்கப்பட்டு விட்டதாக பிக்டெட் வங்கி கூறிவிட்டது. மேலும், எந்தக் கணக்கில் தொகை செலுத்தப்பட்டதோ அந்தக் கணக்கை வாடிக்கையாளர் முடித்துக் கொண்டு விட்டதாகவும் தெரிவித்தது. இதனால் கர்சான் நிறுவனத்தின் பினாமியாகச் செயல்பட்ட வாடிக்கையாளர் யார், அவர் முகவரி என்ன என்பதைக் கண்டறிய முடியவில்லை.

133 கோடி ரூபாய் ஏப்பம் விடப்பட்டு யூரியாவும் வந்து சேராத நிலையில், மத்தியப் புலனாய்வுத் துறை (சி.பி.ஐ) விசாரணையில் இறங்கியது. தரகன் சாம்பசிவ ராவைப் பிடித்து விசாரித்தபோது, நரசிம்ம ராவின் மகன் பிரபாகர் ராவ் மற்றொரு மகனுடைய மைத்துனரான சஞ்சீவ ராவ் மூலமாக தேசிய உரக் கழகத் தலைவர் மற்றும் இயக்குநரைத் தொடர்பு கொண்டு பேரங்கள் நடத்தியதாகவும், இது தவிர அப்போதைய மத்திய உர அமைச்சரின் மகன் பிரகாஷ் சந்திர யாதவ் மூலம் ஒப்பந்தம் போட ஏற்பாடு செய்ததாகவும் கூறியுள்ளான்.

இந்த பேரத்தில் தனக்கு 7 லட்ச ரூபாய் தரகுத் தொகையாக தரப்பட்டது என்றும் ஐதராபாத்திலுள்ள கிரின்லேஸ் வங்கி மூலமாக இத்தொகை பட்டுவாடா செய்யப்பட்டதாகவும் ஒப்புக் கொண்டுள்ளார். பிரபாகர் ராவ், சஞ்சீவ ராவ், பிரகாஷ் சந்திர யாதவ் ஆகியோருக்கு துபாயிலுள்ள ஹவாலா புள்ளியான தர்மேஷ் யாதவ் மூலம் ஐதராபாத்திலுள்ள ஹவாலா புள்ளி ராஜேந்திர பவாணி வழியாக 13 கோடி ரூபாய் தரகுத் தொகை கொடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார். ஆனால் 35 கோடி ரூபாய் இலஞ்சமாகக் கைமாறியுள்ளது என்றும் இதில் சாம்பசிவ ராவுக்கு மட்டும் 7 கோடி ரூபாய் கிடைத்துள்ளதாகவும் செய்திகள் வருகின்றன.

தரகன் சாம்பசிவ ராவின் சாய் கிருஷ்ணா இம்பெக்ஸ் நிறுவனத்தின் முகவரியே மோசடியானது. அம்முகவரியில் முன்னாள் காங்கிரசு எம்.எல்.ஏ.வின் வீடுதான் உள்ளது. இதே போல துருக்கி நாட்டு கர்சான் நிறுவனத்தின் முகவரியும் போலியானது தான். இந்நிறுவனத்துக்கும் உரத்துக்கும் எந்தத் தொடர்புமில்லை என்று இப்போது தெரிய வந்துள்ளது. நரசிம்ம ராவின் மகன் பிரபாகர் ராவ் தனது பினாமி கோல்டு ஸ்டார் நிறுவனத்தின் மூலம் பங்குச் சந்தை மோசடியில் ஈடுபட்டு ஏற்கனவே அம்பலப்பட்டவர். முன்னாள் மத்திய உர அமைச்சரான ராம் லக்கன் சிங் யாதவ் முன்பு பீகார் மாநில அமைச்சராக இருந்தபோது ஊழலில் சிக்கி நாறிப் போனவர். அவரது மகன் பிரகாஷ் சந்திர யாதவ் 1985-ல் கல்கத்தா சிவப்பு விளக்குப் பகுதியில் நடந்த சோதனையின் போது உள்ளாடையோடு பிடிபட்டவர். இத்தகைய கிரிமினல் - மோசடிப் பேர்வழிகள் கூட்டுச் சேர்ந்து, அதிகாரிகளைக் கையில் போட்டுக் கொண்டு சர்வசாதாரணமாக 133 கோடியை விழுங்கி ஏப்பம் விட்டுள்ளனர்.





கைதாகியுள்ள ராவின் உறவினர் சஞ்சீவ ராவ்: ராம் லக்கன் சிங் யாதவின் மகன் பிரகாஷ் சந்திர யாதவ்

இக்கிரிமினல் பேர்வழிகளோடு தேசிய உரக் கழகத் தலைவர் ராமகிருஷ்ணன், இயக்குநர் கன்வார் ஆகியோரையும் கைது செய்து சி.பி.ஐ. விசாரணையைச் சூடேற்றி வருகிறது. ராவ் காங்கிரசின் ஆதரவில் நிற்கும் தேவே கௌடாவின் அரசு, இந்த ஆரம்ப சூரத்தனங்களைக் காட்டி பாரபட்சமின்றி நடவடிக்கை எடுத்துவருவதாக நாடகமாடுகிறது. ராவ் கும்பல் தமது சிறுபான்மை அரசைக் கவிழ்த்து விடாதிருக்க இந்த ஊழல் விவகாரத்தை ஒரு துருப்புச் சீட்டாகப் பயன்படுத்துவதுதான் கௌடா அரசின் நோக்கமாக உள்ளதே தவிர, ஊழல் பெருச்சாளிகளைத் தண்டிப்பது அல்ல. ஏனெனில் பிரபாகர் ராவின் கோல்டு ஸ்டார் நிறுவன பங்கு மோசடியில் கூட்டுச் சேர்ந்துள்ள ப. சிதம்பரம், மாட்டுத் தீவன ஊழலில் சிக்கியுள்ள பீகாரின் லல்லு பிரசாத் யாதவ் எனக் கறைபடிந்த ஊழல் சிகாமணிகள்தான் தேவே கௌடா அரசை அலங்கரிக்கின்றனர். உர ஊழலைக் கிளறினால் "நீ மட்டும் யோக்கியமா?" என்று ராவ் கும்பல் எதிர்த்தாக்குதல் நடத்தி, ஐக்கிய முன்னணி அரசின் யோக்கியதையை நாறடித்து விடும் என்பதால் தேவே கௌடா அரசு "சட்டம் தன் கடமையைச் செய்யும்" என்று அடக்கியே வாசிக்கிறது.

இரகசிய வங்கிகளில் பினாமி பெயரில் போடப்பட்டுள்ள உர ஊழல் பணத்தை ஒரு போதும் மீட்கவே முடியாது என்று சி.பி.ஐ. அதிகாரிகளே ஒப்புக் கொள்கின்றனர். அதிலும் சர்வதேச மோசடி கிரிமினல் ஹவாலா கும்பலுடன் கூட்டுச் சேர்ந்து நடந்துள்ள இப்பகற் கொள்ளையை சாதாரண விசாரணைகளால் கண்டறியவும் முடியாது. "ராவ் கும்பலின் சொத்துக்களைப் பறிமுதல் செய்! தண்டனை கொடு!" என்று உழைக்கும் மக்கள் இனி போராட்டத்தில் இறங்காவிட்டால், இது போன்ற பகற்கொள்ளையைத் தடுத்து நிறுத்திடவும் முடியாது.

★ பாலன்



படிப்பகம்

www.padippakam.com

17-ம் பக்கத் தொடர்ச்சி

ளும், இந்த அடியாட்களைப் பயன்படுத்துகின்றனர்; சாதி, மத மோதல்களில்கூட சுரண்டும் வர்க்கத்தினர் இந்தக் குண்டர்களை ஆயுதங்களுடன் ஏவி விடுகின்றனர் என்கிறார், பரமேஸ்வரன். உரிய வயதில் கல்வி, வேலைவாய்ப்பு, வீட்டு வசதி, குடும்ப வாழ்க்கை மறுக்கப்பட்டு, வறுமை, சமூகப் புறக்கணிப்பு காரணமாக வாழ்வதற்கே கொலை, கொள்ளை, திருட்டு, விபச்சாரம் போன்ற குற்றங்கள் புரியும் நபர்கள் தாம் சுரண்டும் வர்க்கத்தினர், முதலாளித்துவ அரசியல் தலைவர்களின் குண்டர்களாக மாறுகின்றனர் என்கிறார், பரமேஸ்வரன்.

இவையெல்லாம் ஏதோ தமது அரிய கண்டுபிடிப்புபோல பசப்புகிறார். மாஃபியா கும்பல்கள், கிரிமினல் குற்றச் செயல்கள், சமூக விரோதிகள், ரவுடிகள் - குண்டர்கள், கிரிமினல்மயமாகும் அரசியல் ஆகியவை பற்றி எழுதும் எந்தவொரு முதலாளித்துவப் பத்திரிகைகள், ஆய்வறிக்கைகளை எடுத்தாலும் அவற்றின் அடிப்படைகள் இவைதான் என்று கூறுவதைக் காண முடியும். ஆனால் இதற்கே, சி.பி.எம். கட்சி கூறும் ''அரசின் வர்க்கத்தன்மை'' பற்றிய சாயத்தைப் பூசி, ''இதுதான் வர்க்கப் பார்வையின் அடிப்படையிலான மார்க்சிய ஆய்வு தரும் வெளிச்சம்'' என்று பீற்றிக் கொள்கிறார், பரமேஸ்வரன்.

சமுதாயம் பற்றிய வர்க்க அடிப்படையிலான ஆய்வுகள் என்பது மார்க்சியவாதிகளின் புதிய கண்டுபிடிப்பல்ல; ஏற்கனவே முதலாளித்துவ சிந்தனையாளர்களின் ஆய்வுகளிலேயே அது இருக்கிறது; ஆனால் வர்க்க முரண்பாடுகளும் மோதல்களும் தவிர்க்க இயலாமல் பட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கு இட்டுச் செல்லும் என்பதை முன்வைத்து, அதற்காகப் போராடுவதுதான் மார்க்சியவாதிகளை வேறுபடுத்திக் காட்டுவது என்றனர், மார்க்சிய ஆசான்கள். அதேபோலத்தான், சமூக விரோதிகளும், கிரிமினல் குற்றங்களும் மட்டுமல்ல, நாட்டின் அரசியலே கிரிமினல்மயமானது, அதற்கான காரணங்கள் பற்றிய ஆய்வுகள் முதலாளித்துவ சிந்தனையாளர்களே முன் வைக்கின்றனர். ஆனால் இது எப்படி பாசிச ஆட்சிமுறைக்கு சமூக அடித்தளமாக அமைந்து, பாசிச அரசு ஒடுக்குமுறையும் ஏற்பட வழி வகுக்கிறது, அதை எதிர்த்து முறியடிப்பது நமது செயல்தந்திரத்தின் ஒரு பகுதியாகக் கொள்ள வேண்டும் என்பதுதான் நாம் வைக்கும் புரட்சிகர அணுகுமுறை. இதற்காகத்தான் கிரிமினல் அரசியல்வாதிகளையும், அரசியல் கிரிமினல்களையும் எதிர்த்து ''திடீர்ப் பணக்கார அரசியல் ரவுடிகள் ஒழிப்பு'' இயக்கம் நடத்தப்படுகிறது.

பொதுவில் சமூக விரோதிகளும் - ரௌடிகள், குண்டர்கள், அடியாட்கள், அவர்களின் கிரிமினல் குற்றங்களும் சமுதாய, பொருளாதார காரணங்களால் உருவானாலும் குறிப்பாக, அரசியல் கிரிமினல்மயமாவதற்கான அடிப்படை சட்டமன்ற, நாடாளுமன்ற ஜனநாயகம் எனப்படும் ஓட்டுச்சீட்டு அரசியலில் உள்ளது. அரசியல் கட்சிகளை நடத்துவது, நிதி வசூலிப்பது, தேர்தல் தில்லுமுல்லுகள், அராஜகம், வன்முறை மற்றும் நாடாளுமன்ற, சட்டமன்ற ரௌடித்தனம் ஆகிய நடவடிக்கைகளில் கைதேர்ந்த கிரிமினல் அரசியல்வாதிகளை ஓட்டுச்சீட்டு அரசியல்தான் பெற்றெடுத்தது. காந்தியம், கம்யூனிச சோசலிசம், ஜனநாயக சோசலிசம், இந்து ராஷ்டிரம், திராவிடம், தேசியம் போன்ற கொள்கை, கோட்பாடு, இலட்சியங்களை ஒதுக்கிவிட்டு தனிமனிதக் கவர்ச்சி, இலவசத் திட்டங்கள்-சலுகைகளை மையமாகக் கொண்ட கவர்ச்சிவாதம், உதிரிப் பாட்டாளிமயமான பொறுக்கி அரசியல், கிரிமினல் அரசியல் என்கிற பரிணாம வளர்ச்சியை ஓட்டுச்சீட்டு அரசியல் அடைந்துள்ளது. ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகள் எல்லாமே இந்த அடிப்படையில்தான் இயங்குகின்றன.



தேர்தல் நாளன்று ஆயுதங்களுடன் அலையும் சி.பி.எம். குண்டர்கள்.

சி.பி.எம். கட்சி- இதற்கு விதிவிலக்கல்ல. பம்பாய் தாவூத் இப்ராகிம் குற்றக் கும்பலைப் போன்றது கல்கத்தா ரஷீது கானின் குற்றக் கும்பல் . இந்தக் கும்பலுடன் நெருங்கிய கூட்டு வைத்துள்ளது, சி.பி.எம். மாவட்டக் கமிட்டி உறுப்பினர்கள், எம்.எல்.ஏக்கள், அமைச்சர்கள் குற்றக் கும்பலுடன் உறவு வைத்திருப்பது கட்சிக்குள்ளேயே விவகாரமாகி சிலர் விலக்கப்பட்டதும் மீண்டும் சேர்க்கப்பட்டதும், கட்சியே கிரிமினல்களிடம் சிக்கிக் கொண்டுவிட்டது என்று மேற்கு வங்க அதிருப்தி தலைவர்கள் அறிக்கை விட்டதும் இதற்குச் சான்றாக உள்ளன. இதை மூடி மறைப்பதற்காகவே, நாம் நடத்துவது இயக்கம் பற்றி ''சில தனிநபர்களின், ரௌடிகளின், குண்டர்களின் செயலாக மட்டும் பார்த்து அவர்களுக்கெதிராக, இன்னொரு ரௌடித்தனத்தை, குண்டர்களை ஏவிவிடுவதன் மூலம் இதனை ஒழிக்க முடியாது. அதனால் நாட்டில் அராஜக நிலைமைதான் ஏற்படும். அதுதான் நக்சலைட்டுகள் முன் வைக்கும் தீர்வு?'' என்கிறார் பி.ஆர்.பி.

புரட்சியாளர்களின் நிலைப்பாடுகளைத் திரித்துச் சொல்வதோடு படுபிற்போக்கான எதிர்ப்புரட்சிக்காரர்கள் கூடச் சொல்லத் துணியாதவாறு, ''இன்னொரு ரௌடித்தனத்தை, குண்டர்களை ஏவி நாட்டில் அராஜக நிலை'' ஏற்படுத்துவதுதான் நமது தீர்வு என்று பச்சையாகப் புளுகுகிறார், சி.பி.எம்மின் கோயாபல்சு, பரமேஸ்வரன். நாம் திருவரங்கம் கருவறை நுழைவுப் போராட்டம் நடத்திய போது கூட தி.க. வீரமணி, சி.பி.எம். பரமேஸ்வரன், இந்து முன்னணி இராம. கோபாலன் ஆகிய இவர்களெல்லாம் இப்படித்தான் அவதூறு செய்தனர். ஆனால் தனிநபர் மீதான தாக்குதல் என்கிற முறையில் எங்கேயாவது நமது இயக்கமும் நடவடிக்கையும் இருந்தது என்று நிரூபிக்க முடியுமா? சான்று காட்ட முடியுமா?

அதற்குமாறாக நமது ஒவ்வொரு இயக்கத்தின் போதும் சிறு வெளியீடுகள் பல பத்தாயிரக்கணக்கிலும், பாடல் ஒலிப்பேழைகள் ஆயிரக்கணக்கிலும் விற்கப்படுகின்றன. இலட்சக்கணக்கான பிரசுரங்கள் விநியோகிக்கப்படுகின்றன. அதிமுக., பாரதிய ஜனதா, காங்கிரசு தவிர அநேகமாக அனைத்துக் கட்சிகள், ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக அமைப்புகள், தொழிற்சங்கங்களின் மேடைகளிலும் நமது பாடல் ஒலிப்பேழைகள் முழங்குகின்றன. இந்த இயக்கங்களுக்கான நிதி பல ஆயிரக்கணக்கில் பொது இடங்களில் பொது மக்களிடமிருந்து திரட்டப்படுகிறது. பொதுக்கூட்டங்கள், மிதிவண்டிப் பேரணிகள், ஊர்வலங்கள், சுவரெழுத்துக்கள், சுவரொட்டிகள், கலை நிகழ்ச்சிகள் மூலம் பிரச்சாரங்கள் நடத்தி, ஆதரவும் திரட்டப்படுகிறது. உழைக்கும் மக்கள் இந்த இயக்கத்தினருக்கு நிதியும், உணவும், தங்குமிடங்களும் வழங்கி வரவேற்கின்றனர். அளவிலும், தன்மையிலும்



படிப்பகம்


www.padippakam.com

இவையெல்லாம் புரட்சி இயக்க வரலாற்றில் முற்றிலும் புதிய முன்னேற்றமாகும்.

சி.பி.எம்., தி.க. போன்ற மாற்றுக் கட்சிகளின் தலைமைகள் தடுத்த போதிலும் அணிகள் பெருமளவு ஆதரவு தருகின்றனர். குறிப்பாக சி.பி.எம். மேடைகளில் நமது அமைப்புகளின் பெயர்கள் மட்டும் மறைக்கப்பட்டு நமது ஒலிப்பேழைகள் முழங்குகின்றன. அக்கட்சியின் இசைக் குழுக்கள் நமது புரட்சிப் பாடல்களைப் பாடுகின்றன. கருத்துக் குருடரான பரமேஸ்வரன் போன்றவர்களுக்கு இது தெரியாதா? நமது அரசியல் நிலைப்பாடுகள் தவறென்றால், அவற்றை அடிப்படையாகக் கொண்ட பாடல்கள் மட்டும் சரியானவையா? சி.பி.எம். கட்சி பலம் வாய்ந்ததாகப் பீற்றிக் கொள்ளும் கீழத் தஞ்சையிலேயே இறால் பண்ணைகள் அமைக்கப்படுவதைக் கண்டு கொள்ளாமல் இருந்தது தலைமை. புரட்சிகர அமைப்புகள் ''இறால் பண்ணை அழிப்புப் போராட்டம்'' நடத்திய பிறகு அணிகளின் நிர்பந்தம் காரணமாக தானும் இயக்கம் எடுப்பதாகக் காட்டிக் கொண்டு கிளம்பியது, சி.பி.எம். தலைமை.

இவையெல்லாம் காட்டுவதென்ன? குடிசைகள் - குடியிருப்புகளைக் காலி செய்வது, சிறு வியாபாரங்கள் செய்வது முதற்கொண்டு தமது வாழ்க்கையின் எல்லா நடவடிக்கைகளிலும் அரசியல் பின்னணியுடைய கிரிமினல்களை எதிர்கொள்ளும் மக்களுக்கு ஒவ்வொரு அரசியல் நடவடிக்கைகளின் போதும் அரசியல் ரௌடிகளை எதிர்கொள்ளும் ஜனநாயக, முற்போக்கு அமைப்புகளின் அணிகளுக்கு திடீர்ப் பணக்கார அரசியல் ரௌடிகளுக்கு எதிரான இயக்கம் சரியானதாக அவசியமாக இருக்கிறது. அதே ரௌடிகளுடன் கூடிக் குலாவும் தலைமைக்கு அவசியமில்லைதான்!

சரி! ரௌடிகள், குண்டர்களால் எழும் பிரச்சினைகளுக்கு சி.பி.எம். தலைமை கூறும் தீர்வு என்ன? சுரண்டல் சமுதாய முறையினாலும், ஆளும் வர்க்கக் கொள்கைகளினாலும் அரசு அமைப்பினாலும் தோன்றிய இந்நிலைக்குத் தீர்வாக, இவைகளுக்கெதிராக மக்களைத் திரட்ட வேண்டும்; இவைகளையெல்லாம் தூக்கி எறியும் புரட்சிகர சக்தியாக மக்கள் சக்தியைத் திரட்ட வேண்டும், என்கிறார்கள். அதுவரை சமூக விரோத சக்திகளின் அட்டகாசங்களை எப்படி எதிர்கொள்வது? ''பொறுமையாக சகித்துக் கொள்ளுங்கள்! அவர்களுக்கு அடிபணிந்து போய்விடுங்கள்! தனியாகவோ, அமைப்பாகவோ திரண்டு எதிர்க்காதீர்கள்! நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் தேர்தல் வேலைகளைக் கவனிப்பதுதான்!'' என்று உபதேசிக்கிறார்கள். திடீர்ப் பணக்கார அரசியல் ரௌடிகளுக்கு எதிரான நமது இயக்கத்தைக் கொச்சைப்படுத்தும் இதே சி.பி.எம். தலைவர்கள், தாம் நாற்காலிகளைப் பிடிப்பதற்காக கேரளத்திலும், மேற்கு வங்கத்திலும் ஆர்.எஸ்.எஸ்., காங்கிரசு குண்டர்களுக்கு எதிராகத் தேர்தல் ரௌடித்தனத்திற்கு தனது கட்சிக் குண்டர்களை ஏவிவிடத் தவறுவதில்லை. இதற்கான ஆதாரங்கள் நிறைவே உண்டு.



வாக்குச்சாவடியை ஆக்ரமித்த சி.பி.எம். குண்டர்கள்.

இந்த நாடாளுமன்ற முறை நீடிப்பதனால்தான் மக்கள் பிரச்சினைகளுக்காக கிளர்ச்சிகளும் போராட்டங்களும் நடத்தி பல சலுகைகளும் உரிமைகளும் பெற முடிகிறதாம்! அமைச்சர்களும், அதிகாரிகளும், அரசியல் தலைவர்களும் வர்த்தகச் சூதாடிகளும் குற்றவாளிக் கூண்டில் ஏற்றப்பட்டு சிறையில் தள்ளப்படுகின்றனராம்! அரசியல்வாதிகளுக்கெதிரான விசாரணைகளும் வழக்குகளும் வெறும்போலி நாடகங்களே, போலீசு, சி.பி.ஐ., நீதிமன்றங்கள் ஆளுவோரின் கைக்கூலிகளே என்பதை மக்கள் உணர்ந்து வரும்போது, ஓட்டுக் கட்சிகளின் மீதும் நாடாளுமன்ற முறையின் மீதும் நம்பிக்கை இழந்து வரும்போது, இந்தப் போலிக் கம்யூனிஸ்டுகள்தாம் இவற்றின் மீது மாயையை உருவாக்கி வருகின்றனர்.

இதற்கு சித்தாந்த பூர்வமாக நியாயம் கற்பிப்பதற்காக, ''இன்று தேர்தல் முறையும் நாடாளுமன்ற ஆட்சி முறையும்தான் எல்லாக் கொடுமைகளுக்கும் காரணம்'' என்று புரட்சியாளர்கள் கூறுவதாகத் திரித்துச் சொல்லி, தேர்தல் புறக்கணிப்புக்கு எதிரான லெனினுடைய மேற்கோளை எப்போதும் போல சூத்திரமாக ஒப்புவிக்கின்றனர். லெனினுடைய அந்த வழிகாட்டுதல்கள் இந்தியப் புரட்சியின் யுத்தத் தந்திரத்துக்கு எப்படிப் பொருந்தாது என்பதை நாம் பலமுறை விளக்கியும், அதற்கு ஒருபோதும் இவர்கள் பதிலளித்ததில்லை. அந்த லெனினுடைய மேற்கோள்கள் படியேகூட மக்களிடையே உள்ள நாடாளுமன்ற மாயையை அகற்றவே அதில் பங்கேற்க வேண்டும்; ஆனால் இதற்காகவா, இந்த அடிப்படையிலா சி.பி.எம். நாடாளுமன்ற ஆட்சி முறையில் பங்கேற்கிறது. மக்களிடமும் தொழிலாளர்களிடமும் அதன்மீது மாயை இருப்பதையே காரணமாகக் காட்டி, அந்த மாயை அகன்றுவிடாதபடி வலுப்படுத்தி வரும் வேலையைத்தான் சி.பி.எம். செய்கிறது. ''பாராளுமன்ற முறையை விட்டு விலகுவது அவ்வளவு சுலபமானதல்ல. எப்படி உன் நிழலை விட்டு நீ விலக முடியாத முறையில் அது உன்னைத் தொடருகிறதோ அதேபோல் தொடரும்'' என்கிறார், பரமேஸ்வரன்.

இறுதியாக மக்கள், ''இன்று அனுபவிக்கும் கொடுமைகளுக்கெல்லாம் முடிவு கட்டும் சமூகப் புரட்சியின் முன்னேற்றம் ஏற்படுகிறபோதுதான் மக்கள் தேர்தல் மயக்கத்திலிருந்து விடுபடுவார்கள். இதை நக்சலைட்டுகள் இப்போதாவது புரிந்து கொள்வார்களா?'' என்று கேட்கிறார், பரமேஸ்வரன்.

''சரிதான்! ஏற்றுக் கொள்கிறோம்! புரிந்து கொள்கிறோம்!'' என்று வைத்துக் கொள்ளட்டும். நமக்கு இன்னும் சில கேள்விகள் இருக்கின்றன. சமூகப் புரட்சியின் முன்னேற்றத்துக்கும், மக்கள் தேர்தல் மயக்கத்தில் இருந்து விடுபடவும் சி.பி.எம். கட்சி என்ன செய்கிறது? அதற்காக நாடாளுமன்ற அரசியலுக்கு உள்ளேயும் சரி, வெளியேயும் சரி ஒரு சிறு நடவடிக்கையிலாவது ஈடுபடுவதுண்டா? தொழிலாளர்கள், விவசாயிகள், அலுவலர்கள் மாணவர் - இளைஞர், பெண்கள் ஆகிய வெவ்வேறு பிரிவினரின் உடனடி, அன்றாட, தொழில் ரீதியிலான குறைகளை, பிரச்சினைகளைத் தீர்க்கவும் சலுகைகளைப் பெறுவதற்காகவும் போராட்டங்களை நடத்துவதால் மட்டும் தேர்தல் மயக்கத்திலிருந்து விலகி சமூகப் புரட்சிக்கு தயாராகிவிடுவார்களா? நாடாளுமன்ற அரசியலிலும் தொழிற்சங்க வாதத்திலும் மூழ்கிப் போன போலிக் கம்யூனிஸ்டுகள் இதற்குப் பதில் சொல்வார்களா?

Published and Owned by A. SHANMUGARAJ, 25 Arunachalam St., Jothiramalinga Nagar, Madras - 600 083.
Printed by him at EZHIL PRINTS, 110, II Floor, 63, Arcot Rd, Madras - 600 024. Editor: A. SHANMUGA RAJ

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM R.N. 42648/85 Regd. No TN/MS(S) 622


# இதுதான் இன்றைய இந்தியா

எலி, தவளை, ஓணான் இவற்றை மட்டுமே உண்டு உயிர் வாழ்பவர்களைப் பார்த்து இருக்கிறீர்களா? இதோ இந்தப் படத்தில் காணும் மூவருக்கும் அவைதான் உணவு. இவர்களுக்கு மட்டுந்தானா? இல்லை. தமிழ்நாட்டில் சிதம்பரனார் மாவட்டத்திலுள்ள கோனார்க் குளம், சிங்கத்தாக் குறிச்சி என்ற இரு கிராமங்களில் வாழும் சக்கிலியர் சாதியைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டவர்கள், கடந்த ஐந்து வாரங்களாக எலியையும், தவளையையும், ஓணானையும் மட்டுமே உண்டு உயிர் வாழ்ந்து வருகிறார்கள். ஏன் இந்த அவலம்? தன்மானத்தோடு வாழ நினைக்கும் இத்தாழ்த்தப்பட்ட கூலிகளுக்கு, தங்கள் வயற்காடுகளில் வேலை கொடுக்க மறுத்து வருகின்றன, மேல்சாதி மிருகங்கள்; புகார் மனு கொடுக்கச் சென்றவர்களை, பண உதவி - பொருளுதவி கேட்டு நின்றவர்களை ஓட ஓட அடித்துத் துரத்தியது 'சமூக நீதி' காத்த வீராங்கனை ஜெயா அரசு. மலிவு விலை அரிசிக்குக் கூட கையில் காசு வேண்டுமே? அரைகுறைப் பட்டினியின், நோயில் பாதிக் குடும்பங்கள் மடிந்து போயின. உயிர் பிழைத்திருப்போரோ, ''புதிய ஆட்சியிலாவது விடியாதா?'' என்ற நம்பிக்கையில், ஒட்டிய வயிறோடு காத்திருக்கிறார்கள்.



அன்றைய பொழுது உணவு தயார்.

இதோ லாரியில் இருந்து இறக்கப்படும் இந்த நெல் மூட்டைகள் நாகை மாவட்டம் வண்டாம்பாளை கிராமத்தில், ஜெயாவின் உடன்பிறவா சகோதரி சசிகலாவுக்குச் சொந்தமான அரிசி ஆலையில் இருந்து கைப்பற்றப்பட்டவை. ஒரே நாளில் முப்பது லட்ச ரூபாய் மதிப்புள்ள 12,000-க்கும் அதிகமான நெல் - அரிசி - குருணை மூட்டைகள் இங்கிருந்து கைப்பற்றப்பட்டன. இது ஒரு சிறு துளிதான். அதிகாரத்தைப் பயன்படுத்தி அரசு கொள்முதலை முடக்கி, கடந்த இரண்டு ஆண்டுகளாக தஞ்சை - நாகை மாவட்ட விவசாயிகளிடமிருந்து பல இலட்சக்கணக்கான நெல்மூட்டைகளை வாங்கி பதுக்கியது ஜெயா - சசி கும்பல்; ஆந்திராவுக்கும் கேரளாவுக்கும் அரிசி மூட்டைகளைக் கடத்திச் சென்று விற்று, கோடி கோடியாய்க் கொள்ளையடித்தது. தேர்தலில் தோல்வி நெருங்கிக் கொண்டிருந்த வேளையிலும் கொஞ்சமும் அச்சமின்றி, பதுக்கி வைத்திருந்த நெல் - அரிசி மூட்டைகளோடு பணக்கட்டுகளையும் கேரளாவிற்கு கடத்திச் சென்றுவிட்டது இக்கொள்ளைக் கூட்டம்.



வேலையின்றி, கைதூக்கி விடுவோர் யாருமின்றி, வறுமையால் அரைகுறைப் பட்டினியால் மண்ணோடு மண்ணாக மடிந்துவரும் உழைக்கும் மக்கள் ஒரு புறம்; இலஞ்சம் - ஊழல் - அதிகார முறைகேடுகளின் மூலம் வயல்வெளிகள் - தோட்டங்கள் - ஆலைகள் - அடுக்கு மாளிகைகள் என வளைத்துப் போட்டுள்ள ஜெயா - சசி கும்பல் மறுபுறம். சொந்த நாட்டையே சூறையாடிய இக்கொள்ளைக் கூட்டம் தண்டனையின்றித் தப்பிவிட நாம் அனுமதிக்கலாமா?

படிப்பகம்